# கோயம்புத்தூர் மாநகராட்சி

அனுப்புநர்

திரு ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்- 641 001

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
வார்டு குழுத்தலைவர்கள், ஆளும்கட்சி
மற்றும் எதிர் கட்சித் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.
அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.
சட்டமன்ற உறுப்பினர்கள்
(கோவை கிழக்கு, மேற்கு,
தொண்டாமுத்தூர், பேரூர் மற்றும்
சிங்காநல்லூர் சட்டமன்ற தொகுதிகள்),
பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை மற்றும் நீலகிரி
பாராளுமன்றத் தொகுதிகள்)

**ந.க.எண் : 3692 / 2008 / எம்சி. 8 நாள் : 17.3.2008**

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற சாதாரணக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற சாதாரண கூட்டம் வருகின்ற **24.3.2008** திங்கள்கிழமை காலை **10.30** மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத்தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் அனுப்பப்படுகிறது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

இணைப்பு : 1

/ உண்மைநகல் / உத்திரவின்படி/

17/03/08
மாமன்ற செயலாளர்

நகல் :

துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மார்ச் 2008 -மாமன்ற சாதாரணக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| பொருளடக்கம் | |
| | அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br><br>ஆ) தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி |
| வ. எண். | இ). தீர்மானத்திற்குரிய பொருள் |
| 1 | தெற்கு மண்டலம் - வ.உ.சி. பூங்கா அருகில் உள்ள சிற்றுண்டி சாலை – திருமதி டி. ராஜலட்சமி என்பவருக்கு உரிமம் வழங்கப்பட்டது – வாரிசுதாரருக்கு பெயர் மாற்றம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 2 | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் - வார்டு எண் 4- மகாத்மா காந்தி ரோடு – சரளைக்கல் சாலை அமைத்தல் பணி - ரூ. 25 இலட்சம் மதிப்பீடு – நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 3 | பொது சுகாதாரப் பிரிவு - கோழிக்கடை கழிவுகள் அகற்றுதல் -நிர்வாகக் கட்டணம் நிர்ணயித்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 4 | வடக்கு மண்டலம் - 31 வது வார்டு – வாகன நிறுத்துமிடம் கட்டணம் மாற்றியமைத்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 5 | வடக்கு மண்டலம் - சத்தி ரோடு ஆம்னி பேருந்து நிறுத்தம்-ஒப்பந்த அடிப்படையில் ஆம்னி பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் வசூலித்தல்-மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 6 | வடக்கு மண்டலம் - சத்தி ரோடு ஆம்னி பேருந்து நிறுத்தம் - புதிய கடைகள் ஏல நிபந்தனைகள் தளர்த்துதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 7 | பொறியியல் பிரிவு - மாநகராட்சி பொதுக்கிடங்கில் உள்ள உபயோகமற்ற பொருள்கள்-பொதுஏலம் நடத்தப்பட்டது -மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 8 | பொது சுகாதாரப் பிரிவு-பொன்விழா ஆண்டு நகர்ப்புற சுயவேலை வாய்ப்புத் திட்டம் - சிறப்பு முன்னுரிமை அடிப்படையில் பயனாளிகள் பட்டியலில் பெயர் சேர்த்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 9 | பணியமைப்பு - திருமதி க. பாப்பாத்தி, பலநோக்கு சுகாதார பணியாளர் - ஒருவழி மாறுதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 10 | பொறியியல் பிரிவு - வார்டு எண் 6 - சிங்காநல்லூர் சந்தைப்பேட்டை வளாகம் -அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - ரூ.22 இலட்சம் மதிப்பீடு - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 11 | கிழக்கு மண்டலம் - குத்தகை இனங்கள் - உரிம காலம் முடிவடைந்தது - பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோருதல்-மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 12 | பொறியியல் பிரிவு -11 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 13 | நகரமைப்புப் பிரிவு - வடக்கு மண்டலம் -கணபதி கிராமம் - க.ச.எண் 152/ 1ஏ2, 166 /3எ1 – 2.86 ½ - ஏக்கர் நிலம் - தொழிற்சாலை பகுதியிலிருந்து குடியிருப்பு பகுதியாக மாற்றம் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |
| 14 | நகரமைப்புப் பிரிவு - தெற்கு மண்டலம் -வார்டு எண் 42 - 40 அடி அகல திட்ட சாலை - கட்டாய நில ஆர்ஜிதம் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |
| 15 | வருவாய் பிரிவு - பொது சொத்துவரி சீராய்வு - அரசு ஆணை வெளியிடப்பட்டது – மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் |
| 16 | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - வார்டு எண் 27- அவிநாசி ரோடு மாநகராட்சி வணிக வளாகம் மேற்கு பகுதி - பாஸ்போர்ட் அலுவலகம் - உள்கட்டமைப்பு பணிகள் - 24.8 இலட்சம் மதிப்பீடு – நிர்வாக அனுமதி வேண்டுதல் - தொடர்பாக |
| 17 | வடக்கு மண்டலம் - வார்டு 33 - சிவானந்தா காலனி டேங்க் சாலை – அருள்மிக கற்பக விநாயகர் திருக்கோயில் - சொத்துவரி விலக்களித்தல் மற்றும் குடிநீர் இணைப்பு வழங்குதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 18 | நகரமைப்புப் பிரிவு - கிழக்கு மண்டலம் - புலியகுளம் சாலை – 74.18 சென்ட் நிலம் - பொது உபயோகப் பகுதியாக மாற்றம் செய்தல் - பலமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவித்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| 19 | பொறியியல் பிரிவு - தெரு விளக்குகள் பராமரிப்பு - மின்சார சேமிப்பு முறைகளில் பராமரித்தல் - ஒப்பந்தப்புள்ளி கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 20 | பொறியியல் பிரிவு - மாநகராட்சிப் பள்ளிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் சாதனங்கள் பொருத்துதல் பணி - ரூ. 21. இலட்சம் மதிப்பீடு – நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 21 | தெற்கு மண்டலம் - வார்டு எண் 42 – சாமி அய்யர் புது வீதி – கதவு எண் 92 - குடிநீர் இணைப்பு பெற தொகை செலுத்தப்பட்டது – ஆட்சேபணை காரணமாக இணைப்பு வழங்கப்படாதது – தொகை திரும்ப செலுத்துதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 22 | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - வார்டு எண் 27- அவிநாசி ரோடு மாநகராட்சி வணிக வளாகம் வடக்கு பகுதி - பாஸ்போர்ட் அலுவலகம் - உள்கட்டமைப்பு பணிகள் - 24.7 இலட்சம் மதிப்பீடு – நிர்வாக அனுமதி வேண்டுதல் - தொடர்பாக |
| 23 | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - வார்டு எண் 45-ரங்கே கவுண்டர் வீதி – வணிக வளாகம் கட்டுதல் பணி - ரூ. 20 இலட்சம் மதிப்பீடு – நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 24 | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - வார்டு எண் 27-வ.உ.சி. பூங்கா நீரூற்றுதல் அழகுபடுத்துதல் பணி - ரூ. 24.75 இலட்சம் மதிப்பீடு – நிர்வாக அனுமதி கோருதல்-தொடர்பாக. |
| 25 | பொறியியல் பிரிவு- மேற்கு மண்டலம்-வார்டு எண் 53 - செல்வபுரம் வடக்கு ஹவுசிங் யூனிட் - சமுதாயக்கூடம் முதல் தளம் கட்டுதல் பணி - சட்டமன்ற உறுப்பினர் நிதி ஒதுக்கீடு - ரூ.13.8 இலட்சம் மதிப்பீடு - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 26 | பொறியியல் பிரிவு-தெற்கு மண்டலம்-வார்டு எண் 37 - சி.எம்.சி காலனி சத்துணவு மையம் கட்டுதல் பணி – சட்டமன்ற உறுப்பினர் நிதி ஒதுக்கீடு ரூ.7 இலட்சம் மதிப்பீடு - மாமன்ற அனுமதி கோருதல் தொடர்பாக. |
| 27 | நகரமைப்பு பிரிவு - வடக்கு மண்டலம் - விளாங்குறிச்சி கிராமம் - தொழில்நுட்ப பூங்கா - பொது திறவிடம் மற்றும் சாலைகள் - குத்தகை வழங்குதல் - பராமரிப்பு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| 28 | பணியமைப்பு - உதவி பொறியாளர் பணியிடம் நிரப்புதல் - மாமன்ற அனுமதி கோருதல் தொடர்பாக. |
| 29 | பணியமைப்பு - உதவி நிர்வாகப் பொறியாளர் பதவி உயர்வு - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

நன்றியுரை

## சிறப்புத் தீர்மானம்

கோவை மாநகராட்சியில் தெருவிளக்கு பராமரிப்புகளுக்கு கடந்த காலங்களில் ஒப்பந்தம் பெற்று பணிபுரிந்து வரும் தி/ள் சபரி எலக்ட்ரிக்கல்ஸ், மற்றும் தி/ள் சன்மேக் எண்டர்பிரைசஸ் ஆகிய இரண்டு நிறுவனங்களும் மாநகராட்சிக்கு அவப்பெயரை ஏற்படுத்துகிற விதத்திலும், மாநகர மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யாத விதத்திலும் செயல்பட்டு வருகின்றன.

இந்நிறுவனங்களின் அக்கறையற்ற நடவடிக்கை குறித்து, ஒவ்வொரு மாமன்ற கூட்டத்திலும் அனைத்து கட்சி மாமன்ற உறுப்பினர்களும் தங்களது அதிருப்தியை தெரிவித்த போதும் அதை மேற்படி இரண்டு நிறுவனங்களும் ஒரு பொருட்டாக கருதியது இல்லை. ஆனால் பராமரிக்கப்படாத தெரு விளக்குகளுக்கு கோவை மாநகராட்சியிடம் இருந்து பணம் பெற்றுக் கொண்டு வந்துள்ளனர். தொடர்ந்து கோபுர விளக்குகளுக்கான ஒப்பந்தங்களை மேற்படி நிறுவனங்களே பெற்று வருகின்றன.

மாநகர மக்களிடம் மாநகராட்சிக்கு மிகப்பெரிய அவமானத்தை ஏற்படுத்தி வருகின்ற இந்த இரண்டு நிறுவனங்களையும் எந்த ரூபத்திலும் மாநகராட்சியில் எவ்வித பணிகளையும் செய்ய அனுமதிக்கக் கூடாது. ஆகையால் மேற்படி தி/ள் சன்மேக் எண்டர்பிரைசஸ் , தி/ள் சபரி எலக்ட்ரிக்கல்ஸ் ஆகிய இரண்டு நிறுவனங்களையும் கோவை மாநகராட்சி கருப்பு பட்டியலில் சேர்த்து அறிவிப்பு செய்யக் கோரி தி.மு.க. மாமன்றக்குழு கேட்டுக் கொள்கிறது.

எனவே மேற்படி தி/ள் சன்மேக் எண்டர்பிரைசஸ் , தி/ள் சபரி எலக்ட்ரிக்கல்ஸ் ஆகிய நிறுவனங்களை கருப்புப் பட்டியலில் சேர்த்து அறிவிப்பு செய்யும் வண்ணம் மாமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றலாம்.

<u>மா.ம.தீர்மான எண் : 281 நாள் : 27.03.2008</u>

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 1

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வ.உ.சி. பூங்கா அருகில் உள்ள சிற்றுண்டிச் சாலையினை திருமதி டி. ராஜலட்சுமி, என்பவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவர் கடந்த 7.11.2002-ல் காலமாகி விட்டதால் மேற்படி கடையின் உரிமையினை ராஜகாளி எண்டர்பிரைசஸ் என்ற பெயரில் பெயர் மாற்றம் செய்து தருமாறு மேற்படியாரின் மகனான திரு டி. சதீஷ்குமார் என்பவர் விண்ணப்பம் அளிந்திருந்தார்.

அரசாணை எண். 147 நாள் 30.12.2000-ல் குத்தகையின் உரிமையினை வாரிசுதாரருக்கோ பிரதிநிதிக்கோ மாற்றம் செய்யக்கூடாது என தெரிவித்துள்ளதால் மேற்படி கடையின் உரிமத்தை மாமன்ற தீர்மான எண். 36 நாள் 30.06.2004-ன் மூலம் இரத்து செய்யப்பட்டது.

மேற்படி உரிமம் இரத்து செய்யப்பட்டதை எதிர்த்து திரு. டி. சதீஷ்குமார் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் தடை உத்திரவு பெற்றதன் அடிப்படையில் மேற்படி கடையினை தொடர்ந்து நடத்தி வருகின்றனர். இந்நிலையில் தற்போதைய அரசாணை எண். 92 நாள் 03.07.2007-ல் குத்தகைதாரர் காலமாகிவிட்டதால் குத்தகை உரிமையினை வாரிசுதாரர் பெயருக்கு மாற்றம் செய்து கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் திருமதி டி. ராஜலட்சுமியின் வாரிசுதாரர் திருமதி டி. லட்சுமி பிரியா என்பவர் மேற்படி கடையின் உரிமையினை தனது பெயருக்கு மாற்றம் செய்து தருமாறு கோரி விண்ணப்பம் அளித்துள்ளார்.

மேற்படி விண்ணப்பதாரரின் கோரிக்கையின் மீது மேல் நடவடிக்கை மேற்கொள்ள மாநகராட்சி வழக்கறிஞரின் கருத்து கோரப்பட்டது.

மாநகராட்சி வழக்கறிஞர் தனது 08.02.2008-ம் தேதிய குறிப்பில் அரசாணை எண். 92 நாள் 03.07.2007 முதல் குத்தகைதாரரின் வாரிசுதாரர்கள் அனைத்து பாக்கித் தொகைகளையும் செலுத்துவதன் பேரிலும் நகர்புற உள்ளாட்சி மன்றம் அவ்வப்போது நிர்ணயிக்கும் குத்தகைத் தொகையைச் செலுத்த ஒப்புக்கொள்ளும் நிபந்தனைக்குட்பட்டும் அவர்களுடைய பெயரில் குத்தகை உரிமை மாற்றம் பெற உரிமையுடைவராவார்.

சட்டப்படியான வாரிசுதாரர்கள், பொதுவான குத்தகை நிபந்தனைகள் மற்றும் குத்தகை நிர்ணயத்திற்கு உட்பட்டவர்கள், பெயர் மாற்றம் செய்வதற்கான விண்ணப்ப கட்டணம் ரூ. 500/- ஆக நிர்ணயிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளதால், மேற்படி கடையின் உரிமையாணையை திருமதி டி. ராஜலட்சுமி என்பவர் பெயரிலிருந்து இவரது வாரிசுதாரரான திருமதி டி. லட்சுமிபிரியா என்பவர் பெயருக்கு மாற்றம் செய்வது குறித்து மன்றத்தின் அனுமதி பெற்று பெயர் மாற்றம் செய்யலாம்.

மேலும் மனுதாரரின் சகோதரரால் சென்னை உயர் நீதி மன்றத்தில் மாநகராட்சிக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்கினை திரும்பப் பெற்றுக்கொள்வதற்கு உறுதிமொழியினை பெற்றுக்கொண்டு மனுதாரருக்கு இறுதி உத்திரவு வழங்கலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

மேற்படி மாநகராட்சி வழக்கறிஞர் குறிப்பின்படி வ.உ.சி. பூங்கா சிற்றுண்டிச் சாலையின் உரிமையாணையை திருமதி டி. ராஜலட்சுமி என்பவர் பெயரிலிருந்து திருமதி. டி. லட்சுமிபிரியா என்பவர் பெயருக்கு அரசாணையில் தெரிவித்துள்ள நிபந்தனைகளுக்குட்பட்டும், மாநகராட்சி வழக்கறிஞர் தெரிவித்துள்ள நிபந்தகைளுக்கு உட்பட்டும் பெயர் மாற்றம் செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு மன்றப் பொருள் சமர்பிக்கப்பட்டுள்ளது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண் 9769 /07/ அ 10

**<u>மா.ம.தீர்மான எண் : 282 நாள் : 27.03.2008</u>**

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள சிற்றுண்டிச்சாலை, வ.உ.சி. பூங்கா பகுதியினை ஆக்கிரமிப்பு செய்து செயல்பட்டு வருவதனால் மனுதாரரின் கோரிக்கையினை நிராகரிக்கராம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 2

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண் 4-ல் புதியதாக முறைப்படுத்தப்பட்ட மனைப்பிரிவான மகாத்மா காந்தி ரோட்டிற்கு சரளைக் கற்களால் ஆன சாலை அமைக்க மதிப்பீடு ரூ. 25,00,000 /- க்கு தயாரிக்கப்பட்டு அதற்கு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 2008-09 ம் நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. இந்த மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண் 3486 /2008 / எம்டி 2

**<u>மா.ம.தீர்மான எண் : 283 நாள் : 27.03.2008</u>**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 3

பொருள் :- கோயம்புத்தூர் மாநகராட்சி - பொது சுகாதாரம் - கோழிக்கடைகள் ஆட்டிறைச்சி, மற்றும் மீன் விற்பனை செய்யுமிடங்களில் ஏற்படும் கழிவுகளை சுகாதாரமான முறையில் அப்புறப்படுத்துதல் - நிர்வாகக் கட்டணம் நிர்ணயிப்பது - தொடர்பு.

********

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குள் செயல்பட்டு வரும் கோழிக்கடைகள், ஆட்டிறைச்சி , பன்றி இறைச்சிகடைகள் மற்றும் மீன் விற்பனை செய்யும் கடைகளில் ஏற்படும் கழிவுகள் அனைத்தும் பொது இடங்கள், குளங்கள் மற்றும் காலி திறந்த வெளியிடங்களில் கொட்டப்பட்டு பொது சுகாதாரக் கேடு ஏற்படுவதாக மாமன்ற உறுப்பினர்களிடமிருந்தும், பொதுமக்களிடமிருந்தும் புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. எனவே, மேற்படி கடைகளில் ஏற்படும் கழிவுகள் அனைத்தும் சுகாதாரமான முறையில் சேகரித்து மாநகராட்சி மூலம் அப்புறப்படுத்துவதற்கு கீழ்க்கண்ட நடைமுறைகளை கடைபிடித்து செயல்படுத்துவதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

1. மாநகராட்சி எல்லைக்குள் செயல்படும் கோழிக்கடைகள், ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி, பன்றி இறைச்சி கடைகள், மீன் விற்பனை கடைகள் ஆகிய அனைத்து கடைகளின் உரிமையாளர்களும் தங்கள் கடைகளில் ஏற்படும் கழிவுகளை அவர்களுக்கு சொந்தமான இடத்திலேயே அனுமதிக்கப்பட்ட சேகரிப்பு டிரம்களில் சேகரித்து வைத்து மாநகராட்சி நிர்ணயிக்கும் நிர்வாக கட்டணத்தை செலுத்தி மாநகராட்சி வண்டிகளில் ஒப்படைக்க வேண்டும். இதற்கு மாநகராட்சி சட்டம் 1981 சட்டப்பிரிவு 227,228,229,360,391 மற்றும 392 ஆகிய பிரிவுகளில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2. அவ்வாறு இன்றி கழிவுகளை பொது சுகாதாரத்திற்கு இடையூறு விளைவிக்கும் வகைகளில் பொது இடங்களில் கொட்டுபவர்கள் மீது மாநகராட்சி சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

3.மாநகராட்சி 1981ம் ஆண்டு சட்ட பிரிவு 360ன்படி மாநகராட்சிக்கு உரிமையாணைக் கட்டணம் செலுத்தி உரிமை பெற்று தொழில் நடத்த வேண்டும்.

4. தெரு ஓரங்கள், திறந்த வெளியிடங்கள் மற்றும் பொது இடங்களில் கடைகள் வைத்து நடத்த அனுமதிக்கப்படமாட்டாது. தங்களுக்கு சொந்தமான இடத்தில் மட்டுமே சுகாதாரமான முறைப்படி மாநகராட்சியால் தெரிவிக்கப்படும் நிபந்தனைகளின்படி கடைகள் நடத்தப்பட வேண்டும். அவ்வாறின்றி பொது இடங்களில் நடத்தப்படும் கடைகள் மாநகராட்சியால் அப்புறப்படுத்தப்படுவதுடன் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

சுகாதாரநிலைக்குழு தீர்மான எண்.17, நாள் 23.11.2007-ல் கோழிக்கடைகள், ஆட்டிறைச்சி கடைகள், மாட்டிறைச்சி கடைகள், பன்றி இறைச்சி கடைகள் மற்றும் மீன் விற்பனை செய்யும் கடைகளில் ஏற்படும் கழிவுகளை அகற்ற நிர்வாகக் கட்டணம் கீழ்க்கண்டவாறு நிர்ணயித்து தீர்மானித்துள்ளது.

1. <u>கோழிக்கடைகள் மற்றும் மீன்கடைகளில் ஏற்படும் கழிவுகளை அகற்றுவதற்கு</u>
   (அ) வருடம் முழுவதும் செயல்படும் கடைகளுக்கு ஒரு மாதத்திற்கு கட்டணம் - ரூ.500/-
   (ஆ) குறிப்பட்ட நாட்களில் செயல்படும் கடைகளுக்கு நாள் ஒன்றுக்கு கட்டணம் - ரூ.100/-
2. <u>ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி மற்றும் பன்றி இறைச்சி விற்பனை செய்யும் இடங்களில் ஏற்படும் கழிவுகளை அகற்றுவதற்கு.</u>
   (அ) வருடம் முழுவதும் செயல்படும் கடைகளுக்கு ஒரு மாத கட்டணம் - ரூ.200/-
   (ஆ) குறிப்பட்ட நாட்களில் செயல்படும் கடைகளுக்கு நாள் ஒன்றுக்கு கட்டணம் - ரூ. 50/-

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.8, நாள்.17.08.2007 மற்றும் தீர்மான எண்-1, நாள்.23.01.2008ல் கோழிக்கடைகள், ஆட்டிறைச்சி கடைகள், பன்றி இறைச்சி கடைகள் மற்றும் மீன் விற்பனை செய்யும் கடைகளில் ஏற்படும் கழிவுகளை அகற்ற நிர்வாகக் கட்டணம் கீழ்க்கண்டவாறு நிர்ணயித்து தீர்மானித்துள்ளது.

1. கோழிக்கடை கழிவுகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 600/-
2. ஆட்டிறைச்சி மற்றும் இதர இறைச்சி கடைகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.500/-

மேற்கண்டவாறு கழிவுகளை அகற்றுவதற்கு சுகாதாரக்குழு மற்றும் வரி விதிப்பு மற்றும் நிதி நிலைக்குழு தீர்மானங்களை ஒப்பு நோக்கி நிர்ணயிப்பது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் பரிந்துரைக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றத்தின் முடிவுக்கு ந.க.எண். 13139 /2007 / எம்.இ.7

## <u>மா.ம.தீர்மான எண் : 284 நாள் : 27.03.2008</u>

கழிவுகளை அகற்ற நிர்வாக கட்டணமாக கோழிக்கடை கழிவுகளுக்கு மாதம் ஒன்றிற்கு ரூ. 600/- எனவும், ஆட்டிறைச்சி மற்றும் இதர இறைச்சி கடைகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 500/- எனவும் நிர்ணயம் செய்து தீர்மானிக்கப்படுகிறது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்துார் மாநகராட்சி

---

## பொருள் எண் 4

பொருள்- வாகன நிறுத்தும் இடம் -கோவை மாநகராட்சி – வடக்கு மண்டலம் 31 வது வார்டில் கிராஸ்கட் சாலை காளிங்கராயன் சாலை சந்திப்பில் மாநகராட்சி வாகன நிறுத்தும் இடத்தில் வாகன நிறுத்தக் கட்டணம் மாற்றி அமைப்பது சம்பந்தமாக.

----------------

கோவை மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட கிராஸ் கட் சாலை மற்றும் சுற்றுப்பகுதிகள் நெரிசல் மிகுந்த சாலைகளாகவும், வியாபார நிறுவனங்கள் நிறைந்த பகுதியாகவும் உள்ளதால் பொதுமக்கள் அதிகமாக வந்து செல்கின்றனர். மாலை நேரங்களில் பெருகிவரும் வாகனங்களால் ஏற்படும் நெருக்கடிகளால், போக்கு வரத்திற்கு மிகுந்த சிரமம் ஏற்படுகிறது.

தற்போது பெருகிவரும் வாகன நெருக்கடியால் ஏற்படும் போக்குவரத்து நெருக்கடியை தவிர்க்க கோவை மாநகராட்சி வாகன நிறுத்தும் இடம் கிராஸ்கட் சாலை காளிங்கராயன் சாலையில் அமைக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட இடத்தில் வாகனங்களை நிறுத்துவதற்கு நான்கு சக்கர வாகனங்களுக்கு ரூ 20- ம் இரண்டு சக்கர வாகனங்களுக்கு ரூ 10- ம் சைக்கிள்களுக்கு ரூ 5-ம் வசூலிக்கப்பட்டு வருகிறது.

ஆனால் மேற்கண்ட கட்டணம் மிகவும் அதிகமாக உள்ளதாகவும் ஒரு மணி நேரம் அல்லது அரைமணி நேரம் வாகனம் நிறுத்தி செல்வோரும் அதே கட்டணத்தை செலுத்துவது என்பது மிகவும் அதிகமாக இருப்பதாக பொது மக்களும் மாமன்ற உறுப்பினர்களும், கருத்து தெரிவிக்கின்றனர்.

எனவே, மேற்கண்ட மாநகராட்சி வாகன நிறுத்தத்தில் நிறுத்தப்படும் நான்கு சக்கர வாகனங்கள், இரண்டு சக்கர வாகனங்கள் , சைக்கிள்கள் ஆகியவற்றிற்கு கீழக்கண்டவாறு கட்டணத்தை மாற்றி நிர்ணயம் செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

| | | தற்போது வசூலிக்கப்படும் கட்டணம் | மாற்றி நிர்ணயம் செய்யும் கட்டணம் |
|---|---|---|---|
| 1. | நான்கு சக்கர வாகனம் | ரூ 20/- (ஒவ்வொரு ஆறுமணி நேரத்திற்கும்) | ரூ 10/- (ஒவ்வொரு மூன்று மணி நேரத்திற்கும்) |
| 2. | இரண்டு சக்கர வாகனம் | ரூ 10/- (ஒவ்வொரு ஆறுமணி நேரத்திற்கும்) | ரூ 5/- (ஒவ்வொரு மூன்று மணி நேரத்திற்கும்) |
| 3. | சைக்கிள்களுக்கு | ரூ 5/- (ஒவ்வொரு ஆறுமணி நேரத்திற்கும்) | ரூ 2/- (ஒவ்வொரு ஆறுமணி நேரத்திற்கும்) |

பணியாளர்கள் பற்றாக்குறை காரணமாக வாகன நிறுத்தக்கட்டண வசூல் பணியை வரும் 2008 – 2009 ஆம் ஆண்டுக்கான குத்தகை இனங்களில் சேர்க்கப்பட்டு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது. மேலும், ஏலத்தில் கலந்து கொள்பவர்கள் கீழ்கண்டவாறு வைப்புத் தொகைகளை செலுத்திட தொகை நிர்ணயிக்கலாம்.

| | | |
|---|---|---|
| வைப்புத் தொகை | - | ரூ 1,00,000 |
| காப்புத் தொகை | - | ரூ 1,00,000 |
| ரூ 5,00,000 மதிப்புள்ள சொத்துக்கான சால்வன்சி (அல்லது) ரொக்கம். | - | ரூ 1,00,000 |

<u>சிறப்பு நிபந்தனைகள்</u>

1. பெருகிவரும் வாகன நெருக்கடியை கருத்தில் கொண்டு வாகனநிறுத்தும் இடத்தில் ஒரு வாகனம் தொடர்ந்து 12 மணி நேரத்திற்கு மேல் நிறுத்த அனுமதிகிடையாது

2. பழைய பழுதான வாகனங்கள் , பயன்படுத்த இயலாத வாகனங்கள் ஆகியவற்றை வாகன நிறுத்தும் இடத்தில் விட்டு செல்லவோ அல்லது நிறுத்தவோ அனுமதிக்கக் கூடாது.

மேற்கண்ட நிபந்தனைகளையும் கட்டணங்களையும் மற்ற மண்டல அலுவலகங்களில் உள்ள வாகன நிறுத்தும் இடங்களிலும் வசூல் செய்ய அனுமதிக்கலாம். பேருந்து நிலையங்களில் நிறுத்தப்படும் வாகனங்களுக்கு ஒவ்வொரு 12 மணி நேரத்திற்கும் கட்டணம் வசூல் செய்யலாம்.

இது சம்பந்தமாக வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண்-23 நாள்- 23.01.08ன்படி ஒப்புதல் அளித்துள்ளது. இது சம்பந்தமாக மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்-11676/2007/A4(வ)

**மா.ம.தீர்மான எண் : 285 நாள் : 27.03.2008**

1. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண். 23 நாள் 23.01.08-ஐ ஏற்று பொருளில் குறிப்பிட்டுள்ளவாறு கட்டணம் மாற்றி நிர்ணயம் செய்யப்பட்டதை அனுமதிக்க தீர்மானிக்கப்பட்டது. இக்கட்டணங்கள் மற்றும் நிபந்தனைகளை நான்கு மண்டலங்களிலும் உள்ள வாகன நிறுத்தும் இடங்களுக்கும் செயல்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

2. பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள கிராஸ்கட் சாலை வாகன நிறுத்துமிடத்தில் பலஅடுக்கு வாகன நிறுத்துமிடம் அமைக்க நடவடிக்கையில் உள்ளதால், அதுவரை இவ்விடத்தில் மாநகராட்சி பணியாளரைக் கொண்டு கட்டணம் வசூல் செய்துகொள்ள அனுமதிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

3. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் கிராஸ்கட் ரோடு வாகன நிறுத்துமிடத்தில் மாற்றி அமைக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யப்பட்டு வருவதற்கு அனுமதி வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 5

பொருள்- கோவை மாநகராட்சி – வடக்கு மண்டலம் - சக்தி ரோடு ஆம்னி பேருந்து நிறுத்தம் - ஆம்னி பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் வசூலிப்பதை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் குத்தகை தாரர்களுக்கு ஒதுக்கீடு செய்வது தொடர்பாக.

------------

கோவை மாநகராட்சி வடக்கு மண்டலம் சக்தி ரோடு ஆம்னி பேருந்து நிறுத்தத்தில் வந்து செல்லும் ஆம்னி பேருந்துகளுக்கான நுழைவு கட்டணம் ரூ50/- தற்போது மாநகராட்சி பணியாளர்கள் வசூலித்து வருகிறார்கள். பணியாளர்கள் பற்றாக்குறை காரணமாக மேற்கண்ட வசூல் பணி பாதிக்கப்படுகிறது. மேலும் நுழைவுக்கட்டண வசூல் பணியை ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்தால் மாநகராட்சி வருவாய் கனிசமாக உயரும்.

எனவே, ஆம்னி பேருந்து நிறுத்தத்தில் ஆம்னி பேருந்துகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமத்தை பெற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் கலந்து கொள்ளும் உரிமதாரர்கள் கீழ்கண்ட வைப்புத் தொகைகளை செலுத்த நிர்ணயம் செய்யலாம்.

| | | |
|---|---|---|
| வைப்புத் தொகை | - | ரூ 1,00,000 |
| காப்புத் தொகை | - | ரூ 1,00,000 |
| ரூ 5,00,000 மதிப்புக்கான சொத்துமதிப்பு சான்று (அல்லது) ரொக்கம் | - | ரூ 1,00,000 |

மேற்காண் பொருள் தொடர்பாக வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் பரிசீலனைக்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண்-20 நாள்-23.01.08ன் படி ஒப்புதல் அளித்துள்ளது. இது தொடர்பாக மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்- 00551/2008/A4(வ)

**மா.ம.தீர்மான எண் : 286 நாள் : 27.03.2008**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண். 20 நாள் 23.01.08-ன் ஒப்புதலை ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 6

பொருள்- கோவை மாநகராட்சி – வடக்கு மண்டலம் - சக்தி ரோட்டில் ஆம்னி பேருந்து நிறுத்தத்தில் கட்டப்பட்டுள்ள புதிய கடைகளை ஒதுக்கீடு பெற அனைவரும் கலந்து கொள்ளும் வகையில் ஏலம் நடத்த நிபந்தனையை தளர்த்துவது தொடர்பாக.

------------

கோவை மாநகராட்சி வடக்கு மண்டலம் சக்தி சாலையில் அமைந்துள்ள ஆம்னி பேருந்து நிறுத்தத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகள் எண்- 16ஏ முதல் 22ஏ முடிய உள்ள கடைகளை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் ஒதுக்கீடு செய்ய பேருந்து உரிமையாளர்கள் மற்றும் டிராவல்ஸ் ஏஜென்சிகள் மட்டுமே அனுமதிக்கப்பட்டு இருந்தது. ஆனால் கடந்த காலங்களில் பேருந்து உரிமையாளர்கள் யாரும் ஏலம் கோர முன்வராததால் பல கடைகள் காலியாக இருப்பதோடு வருமான இழப்பும் ஏற்படுகிறது.

எனவே, மேற்கண்ட கடைகளுக்கான பொது ஏலத்தில் அனைவரும் கலந்து கொள்ளும் வகையில் நிபந்தனையை தளர்த்தினால் கடைகள் ஏலம் போக அதிக வாய்ப்புகள் உள்ளது. எனவே, அனைவரும் கலந்து கொள்ளும் வகையில் ஏலம் விட அனுமதிக்கலாம்.

ஆம்னி பேருந்து நிறுத்தத்தில் கட்டப்பட்டுள்ள புதிய கடைகளை அனைவரும் கலந்து கொள்ளும் வகையில் ஏலத்தினை நடத்திட வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு கூட்டத்தாள் சமர்ப்பிக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண்- 19, நாள்- 23.01.08ன்படி ஒப்புதல் அளித்துள்ளது. இது தொடர்பாக மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்- **00548/2008/A4(வ)**

**மா.ம.தீர்மான எண் : 287 நாள் : 27.03.2008**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண். 19 நாள் 23.01.08-ன் ஒப்புதலை ஏற்று அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் : 7

கோவை மாநகராட்சி மன்றத்தீர்மான எண் 260 நாள் 27-01-2006-ன் படி கோவை மாநகராட்சி பொதுக்கிடங்கில் உள்ள பழைய உபயோகமற்ற பொருட்களை பொது ஏலத்தில் விட்டு விற்பனை செய்ய மதிப்பீட்டுக் குழு மற்றும் ஆலோசனை குழு அமைத்து மதிப்பீடு செய்து விற்பனை செய்ய மன்ற அனுமதி பெறப்பட்டது. அதன்படி துணை ஆணையாளர் அவர்களை தலைவராகவும் , மாநகரப் பொறியாளர் , நிர்வாகப் பொறியாளர், உதவி பொறியாளர் ( எம்.எஸ்.ஆர் ) குடிநீர் விநியோகம் மற்றும் இளம் பொறியாளர் (வாகனம்) ஆகியோர்களை உறுப்பினர்களாகக் கொண்ட மதிப்பீட்டுக் குழு அமைக்கப்பட்டு, மதிப்பீட்டுக் குழு 2-05-2007 அன்று பொது பண்டக காப்பகத்தில் உள்ள பொருட்களை ஆய்வு செய்து மாலை 4.00 மணி அளவில் துணை ஆணையாளர் அவர்களின் அலுவலக அறையில் கூடி பழைய உபயோகமற்ற 11 இன பொருட்களுக்கு ஒரு கிலோ எடை கிரயத்தின் அடிப்படையிலும் வரிசை எண் 12 முதல் 18 வரையுள்ள மற்றும் இனங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒட்டு மொத்த தொகையாக ( lot system ) கீழ்கண்டவாறு விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1. | உபயோகமற்ற ஆட்டோ மொபைல் உதிரி பாகங்கள் மற்றும் out dated உதிரி பாகங்கள் | ரூ.16/-கி.கி. |
| 2. | உபயோகமற்ற பழைய HDPE தண்ணீர் டேங்க் | ரூ. 3/-கி.கி. |
| 3. | உபயோகமற்ற டைப்ரைட்டிங் மிசின், ஜெராக்ஸ் மிசின் மற்றும் பேட்டரிகள் | ரூ. 30 /-கி.கி. |
| 4. | உபயோகமற்ற மின்சார உதிரி பாகங்கள், குடிநீர் விநியோக பொருட்கள் மற்றும் பொதுவான பொருட்கள் | ரூ. 15 /-கி.கி. |
| 5. | உபயோகமற்ற 70 வாட்ஸ் மற்றும் 250 வாட்ஸ் பிட்டிங்குகள் | ரூ. 90 /-கி.கி. |
| 6. | மின்சார சோக்குகள் | ரூ. 25 /-கி.கி. |
| 7. | உபயோகமற்ற யூ.ஜி. கேபிள்கள். | ரூ. 40 /-கி.கி. |
| 8. | எம். எஸ். ஆங்கிள் | ரூ. 16 /-கி.கி. |
| 9. | உபயோகமற்ற தண்ணீர் லாரி டேங்குகள் மற்றும் பழைய கழிவு நீர் டேங்குகள் | ரூ. 13 /-கி.கி. |

| | | |
|---|---|---|
| 10. | பழைய செய்திதாள்கள் | ரூ. 3.50 /-கி.கி. |
| 11. | உபயோகமற்ற ஸ்டீல் டேபிள் மற்றும் இதர சாமான்கள் | ரூ. 16 /-கி.கி. |
| 12. | உபயோகமற்ற பழைய டயர்கள் , டியுபுகள் மற்றம்பிளாபிகள் | ரூ. 5000 /-lot. |
| 13. | உபயோகமற்ற 75 எச்.பி. மோட்டார்கள், ஸ்விட்சுகள் , ஸ்டாடர்கள் மற்றும் அதன் உதிரி பாகங்கள் ஒட்டு மொத்தமாக | ரூ. 15000 /-lot |
| 14. | உபயோகமற்ற டிராண்ஸ்பார்மர் அதன் உதிரி பாகங்கள் ஒட்டு மொத்தமாக | ரூ. 5000 /-lot |
| 15. | 40 வாட்ஸ் டியூப் லைட் பிட்டிங்குள் | ரூ. 20000 /-கி.கி. |
| 16. | மின்சார பல்புகள் மற்றும் மின்சார உதிரி பாகங்கள் ஒட்டு மொத்தமாக. | ரூ. 2000 /-lot |
| 17. | பழைய ஓடுகள் ஒட்டு மொத்தமாக | ரூ. 1000 /-lot |
| 18. | பழைய மரச் சாமான்கள் ஒட்டு மொத்தமாக. | ரூ. 5000 /-lot |

விற்பனை செய்ய ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கையை ஏதாவது ஒரு தமிழ் நாளிதழில் கோவை பதிப்பகத்தில் மட்டும் 12-10-2007-ம் தேதிக்குள் ஒரு முறை மட்டும் விளம்பரம் செய்யுமாறு செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் கோவை மாவட்டம் , கோவை அவர்களை கேட்டுக் கொள்ளப்பட்டது. அதன்பேரில் மேற்படி ஏலம் மற்றும் ஒப்பந்த அறிக்கை 12-10-2007-ம் தேதி அன்று தினமணி நாளிதழில் செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலரால் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கையின்படி 22-10-2007 மதியம் 1.00 மணி வரை மேற்படி பொருட்களை விற்பனை செய்ய ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு 23-10-2007 தேதி அன்று காலை 11.00 மணி அளவில் துணை ஆணையாளர், உதவி ஆணையாளர் ( தெற்கு ) மற்றும் நிர்வாக பொறியாளர் ( மேற்கு ) ஆகியோர்கள் முன்னிலையில் ஏலம் நடத்தப்பட்டது. ஏலத்தில் 14 நபர்கள் கலந்து கொண்டனர். ஏலம் முடிந்த பின்னர் பெறப்பட்ட 3 ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டன. ஏலம் கோரியவர்கள் மற்றும் பெறப்பட்ட 3 ஒப்பந்தப்புள்ளிகள் அடிப்படையில் கீழ்கண்ட அதிகபட்ச விலை மற்றும் ஏலத்தொகை கோரியவர்கள் விவரம் மற்றும் விலாசங்கள் பின்வருமாறு.

| வ.எண் | பொருட்கள் விபரம் | விலை விபரம் ரூபாயில் | ஏலம் எடுத்தவர் பெயர் மற்றும் விலாசம் |
|---|---|---|---|
| 1. | உபயோகமற்ற ஆட்டோ மொபைல் உதிரி பாகங்கள் மற்றும் out dated உதிரி பாகங்கள் | 17.00 / kg | திருவாளர்கள் வின்னர் மார்க்கெட்டிங், கோவை |
| 2. | உபயோகமற்ற பழைய HDPE தண்ணீர் டேங்க் | 5.25 / kg | திருவாளர்கள் வின்னர் மார்க்கெட்டிங், கோவை |
| 3. | உபயோகமற்ற டைப்ரைட்டிங் மிசின், ஜெராக்ஸ் மிசின் மற்றும் பேட்டரிகள் | 31.00 / kg | திருவாளர்கள் வின்னர் மார்க்கெட்டிங், கோவை |
| 4. | உபயோகமற்ற மின்சார உதிரி பாகங்கள், குடிநீர் விநியோக பொருட்கள் மற்றும் பொதுவான பொருட்கள் | 16.00 /kg | திருவாளர்கள் வின்னர் மார்க்கெட்டிங், கோவை |
| 5. | உபயோகமற்ற 70 வாட்ஸ் மற்றும் 250 வாட்ஸ் பிட்டிங்குகள் | 93.00 / kg | திருவாளர்கள் ஜெய்லானி & கோ, கோவை. |
| 6. | மின்சார சோக்குகள் | 26.00 / kg | திருவாளர்கள் வின்னர் மார்க்கெட்டிங், கோவை |
| 7. | உபயோகமற்ற யூ.ஜி. கேபிள்கள். | 45.00 / kg | திருவாளர்கள் ஜெய்லானி & கோ, கோவை. |
| 8. | எம். எஸ். ஆங்கிள் | 17.10 / kg | திருவாளர்கள் வின்னர் மார்க்கெட்டிங், கோவை |
| 9. | உபயோகமற்ற தண்ணீர் லாரி டேங்குகள் மற்றும் பழைய கழிவு நீர் டேங்குகள் | 14.60 / kg | திருவாளர்கள் ஜெய்லானி & கோ, கோவை. |

| | | | |
|---|---|---|---|
| 10. | பழைய செய்திதாள்கள் | 4.00 / kg | திருவாளர்கள் வின்னர் மார்க்கெட்டிங், கோவை |
| 11. | உபயோகமற்ற ஸ்டீல் டேபிள் மற்றும் இதர சாமான்கள் | 17.00 / kg | திருவாளர்கள் வின்னர் மார்க்கெட்டிங், கோவை |
| 12. | உபயோகமற்ற பழைய டயர்கள், டீயுபுகள் மற்றம் பிளாபிகள் | 6000.00 | திருவாளர்கள் ஜெய்லானி & கோ, கோவை. |
| 13. | உபயோகமற்ற 75 எச்.பி. மோட்டார்கள், ஸ்விட்சுகள் ஸ்டாடர்கள் மற்றும் அதன் உதிரி பாகங்கள் ஒட்டு மொத்தமாக | 25500.00 | திருவாளர்கள் ஜெய்லானி & கோ, கோவை. |
| 14. | உபயோகமற்ற டிராண்ஸ்பார்மர் அதன் உதிரி பாகங்கள் ஒட்டு மொத்தமாக | 13999.00 | திருவாளர்கள் எம்.எம்.ஆர். & கோ, கோவை. |
| 15. | 40 வாட்ஸ் டியூப் லைட் பிட்டிங்குள் | 23500.00 | திருவாளர்கள் ஜெய்லானி & கோ, கோவை. |
| 16. | மின்சார பல்புகள் மற்றும் மின்சார உதிரி பாகங்கள் ஒட்டு மொத்தமாக. | 3200.00 | திருவாளர்கள் வின்னர் மார்க்கெட்டிங், கோவை |
| 17. | பழைய ஓடுகள் ஒட்டு மொத்தமாக | 1300.00 | திருவாளர்கள் வின்னர் மார்க்கெட்டிங், கோவை |
| 18. | பழைய மரச் சாமான்கள் ஒட்டு மொத்தமாக. | 6000.00 | திருவாளர்கள் வின்னர் மார்க்கெட்டிங், கோவை |

எனவே மதிப்பீட்டை காட்டிலும் ஏலத்தில் கோரியவர்களின் தொகை அதிகபட்சமாக உள்ளதினால் அதனை ஒப்புக்கொண்டு அவர்களுக்குரிய பொருட்களை உரிய தொகையை அவர்களிடம் பெற்றுக் கொண்டு வழங்க குழு பரிந்துரை செய்துள்ளது. மேலும் மேற்படி ஏலதாரர்கள் ஏல வைப்புத் தொகையாக ரூ. 25,000-ம் செலுத்தியுள்ளனர். எனவே மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ள பொருட்களை அதன் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள நபர்களுக்கு வழங்க மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண் 16366 /01/ எம்.டி.3.

**மா.ம.தீர்மான எண் : 288 நாள் : 27.03.2008**

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏலத்தை ரத்து செய்ய தீர்மானிக்கப்பட்டது. வணக்கத்திற்குரிய மேயர், துணை மேயர், துணை ஆணையாளர், வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுத் தலைவர் ஆகியோர்களைக் கொண்ட குழு அமைத்து மறு ஏலம் நடத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 8

மாவட்ட ஆட்சியர் அவர்களின் 31.08.2007ம் தேதியன்று காவல் துறை ஆணையர், மாநகராட்சி ஆணையர், திட்ட அலுவலர் (ஊரக வளர்ச்சி முகமை ), திட்ட அலுவலர் (மகளிர் திட்டம் ) வருவாய் கோட்டாச்சியர், உதவி பொது மேலாளர் (நபார்டு வங்கி ) மற்றும் இதர அலுவலர்களுடன் நடைபெற்ற கூட்டத்தில் 1998-ம் ஆண்டு குண்டு வெடிப்பு வழக்கில் சம்பந்தப்பட்டு சிறையில் இருந்து விடுதலையானவர்களின் குடும்பத்தை முன்னேற்றமடையச் செய்ய வேண்டும் என முடிவு செய்யப்பட்டு கூட்ட நடவடிக்கை முடிவு அனுப்பப்ப ட்டுள்ளது.

அதன்படி பொன்விழா ஆண்டு நகர்ப்புற சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் சுயமாக தொழில் செய்ய கடன் உதவி வழங்கப்பட வேண்டியுள்ளதால் கோவை மாநகராட்சிக்கு உட்பட்ட 37,54,56,62,64 ஆகிய வார்டு பகுதியில் குடியிருந்து வரும் இணைக்கப்பட்ட பட்டியலில் உள்ள குடும்பங்களின் பெயர்கள் வறுமை கோட்டிற்கு கீழே உள்ள பட்டியலில் சிறப்பு முன்னுரிமை அடிப்படையில் இடம் பெற வேண்டியுள்ளதால் மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் மன்றப் பொருள் ஒப்பதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - மாநகர காவல் ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர் பரிந்துரைத்துள்ளதால் மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

1. திருமதி. ஆபிதா , 6 /3 செல்லாராவுத்தர் வீதி, கரும்புக்கடை, கோவை 641 008.
2. திருமதி. மும்தாஜ், 141 / 5 , ஆசாத்நகர், கரும்புக்கடை, கோவை 641 008.
3. திரு. அப்துல்ஹை, வி.எஸ். , 4 / 7 , பிலால்நகர், கோவை.
4. திருமதி. கயருன்னிசா, 79/40, முக்கையன் சந்து, பெருமாள் கோவில் வீதி, கோவை.
5. திருமதி. தாஜ்ன்னிசா, 17/ 6 , மானியத்தோட்டம், 3வது சந்து, என்.ஹெச் ,ரோடு, கோவை.
6. திருமதி. பியாரிஜான், 61/ 47, சாரமேடு ரோடு, கரும்புக் கடை, கோவை.
7. திருமதி. சுலையாபி ,32/ 69அல்அமின் காலணி, 3வது வீதி, தெற்கு உக்கடம், கோவை.
8. திரு. யாகூப், 17/ 1, மானியத்தோட்டம், 2 வது வீதி, என்.ஹெச் ,ரோடு, கோவை.
9. திரு. சிலுவைமுத்து, 17/ 24, திருமால் வீதி, 2 வது வீதி, என்.ஹெச் ,ரோடு, கோவை.
10. திரு. பி. முகமது ரபி, 33 அண்ணாநகர், கே.கே. புதூர், சாய்பாபா காலணி, கோவை 38.
11. திரு. அபுபக்கர், 33F, காளியப்பன் வீதி, கே.கே. புதூர், சாய்பாபா காலணி, கோவை 38.
12. திரு. சர்புதின், த/ பெ. அப்துல்காதர், ஈ.8/ 40-7, சண்முகராஜபுரம், செல்வபுரம் வடக்கு , கோவை.
13. திரு. குர்சீத், த/ பெ. பாபாசாஹிப் , 132/ 244, கருணாநிதி நகர், சாய்பாபா கோயில், மேட்டுப்பாளையம் ரோடு, கோவை.
14. திரு. அப்துல் சுக்கூர், த/ பெ. அப்துல்காசிம், 258 /98, கருணாநிதி நகர், சாய்பாபா கோயில், மேட்டுப்பாளையம் ரோடு, கோவை .
15. திரு. நவாப்ஜான், த /பெ. சையத் அப்துல்காசிம், 240 /90, கருணாநிதி நகர், சாய்பாபா கோயில், மேட்டுப்பாளையம் ரோடு, கோவை.
16. திருமதி. கதிஜாபீவி, க/பெ.அலி ஷாஹிப், 290A/113 கருணாநிதி நகர், சாய்பாபா கோயில், மேட்டுப்பாளையம் ரோடு, கோவை.
17. திரு. சிராஜ்தீன், த/பெ. அன்சர்தின், 147/12, கருணாநிதி நகர், சாய்பாபா கோயில், மேட்டுப்பாளையம் ரோடு, கோவை.
18. திரு. லியாகத்அலி, த /பெ. ரஹீம் 226/ 105 , கருணாநிதி நகர், சாய்பாபா கோயில், மேட்டுப்பாளையம் ரோடு, கோவை.
19. திரு. ஹஷன் , த/ பெ. ஹனிபா, 54/ 166 கண்ணப்பபுரம், 2வது வீதி, கருணாநிதி நகர், சாய்பாபா கோயில், மேட்டுப்பாளையம் ரோடு, கோவை.

20. திரு. காதர் ஷெரிப், த/ பெ. இஸ்மாயில், 119 கருணாநிதி நகர், சாய்பாபா கோயில், மேட்டுப்பாளையம் ரோடு, கோவை.

21. திரு. அப்துல் சலாம், த/ பெ . ஹசன்பாபா 26-3 /146, வ.உ.சி. வீதி, பெரியார் நகர், சாய்பாபா கோயில், மேட்டுப்பாளையம் ரோடு, கோவை.

22. திரு. முகமது அலி, த/ பெ. மொய்தீன், 111 கருணாநிதி நகர், சாய்பாபா கோயில், மேட்டுப்பாளையம் ரோடு, கோவை .

23. திருமதி. மும்தாஜ், க / பெ . முகமது அலி பாஷா, 27 /1 . பெரியார் நகர், 2வது வீதி, கோவை.

24. திரு. இமாம்ஷா, த/ பெ. ஜெமேஷா, 113 கருணாநிதி நகர், சாய்பாபா கோயில், மேட்டுப்பாளையம் ரோடு, கோவை .

25 . திரு. அப்துல் மஜீத், 225/ 84-2 . கருணாநிதி நகர், சாய்பாபா கோயில் மேட்டுப்பாளையம் ரோடு, கோவை .

26. திரு. அப்துல்சத்தார், த/ பெ. முஹமது உசேன், 236 / 88 கருணாநிதி நகர், சாய்பாபா கோயில் , மேட்டுப்பாளையம் ரோடு, கோவை.

27. திரு. அப்துல்லா, த /பெ இப்ராஹிம், 283/ 110, கருணாநிதி நகர், சாய்பாபா கோயில் , மேட்டுப்பாளையம் ரோடு, கோவை.

28. திரு. முகமதுமுஸ்தபா, த/ பெ . மீரான் சாஹிப், 116 /2 கருணாநிதி நகர், சாய்பாபா கோயில் , மேட்டுப்பாளையம் ரோடு, கோவை.

29. திரு. காஜாஉசேன், த/பெ அசகார், 14 /49 சாரமேடு மெயின்ரோடு, பாரதி நகர், கோவை.

30. திரு. ஒய். முகமதுரபீக் / ஏ.ஆர். எம். யூசுப், 38 திப்புநகர், கரும்புக்கடை, கோவை

31. திரு. முகமது ரபிக்/ கே.எம். அகமது, 14 /71 இலாகி நகர், கரும்புக்கடை, சாரமேடு, கோவை,

32. திரு. ஏ.எஸ் . மூசா, த/பெ. ஹாரூன்ஷேக், 32 சலாமத் நகர், 2வது வீதி, சாரமேடு, கோவை.

33. திருமதி. ஆமினா, க/ பெ. அனிபா (லேட்) ,141/2 , ஆசாத் நகர், கரும்புக்கடை, கோவை.

ந.க.எண் **20356/07 ME 6**

**மா.ம.தீர்மான எண் : 289 நாள் : 27.03.2008**

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 9**

பொருள் - பணியமைப்பு - கோவை மாநகராட்சி – திருமதி. க. பாப்பாத்தி, பலநோக்கு சுகாதார பணியாளர், சீரநாய்க்கன்பாளையம் நகர் நல மையம் - திருச்சி மாநகராட்சிக்கு மாறுதல் கோருவது – தொடர்பாக.

-------------

கோயம்புத்தூர் மாநகராட்சி, சீரநாய்க்கன்பாளையம் நகர் நல மையத்தில் பல நோக்கு சுகாதார பணியாளராக பணிபுரியும் திருமதி க. பாப்பாத்தி அவர்களுக்கு சொந்த ஊர் திருச்சி என்பதாலும், தன்னுடைய கணவர், குழந்தைகள் மற்றும் வயதான தாயாரும் திருச்சியில் இருந்து வருவதாகவும், தனக்கு திருச்சி மாநகராட்சிக்கு பணிமாற்றம் செய்து தருமாறு விண்ணப்பித்துள்ளார்.

எனவே திருமதி. பாப்பாத்தி, பல நோக்கு சுகாதார பணியாளரை திருச்சி மாநகராட்சியில் பல நோக்கு சுகாதார பணியிடத்திற்கு ஒரு வழி மாறுதல் செய்ய மன்ற அனுமதிக்கு.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். மாமன்ற அனுமதிக்குப் பின் மேற்படி தீர்மானத்தை ஆணையர், திருச்சி மாநகராட்சி மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கும் அனுப்பி வைக்கலாம்.

ந.க.எண் 20850 /08/ எம்சி.3

**மா.ம.தீர்மான எண் : 290 நாள் : 27.03.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 10

கோவை மாநகராட்சி பகுதிகளில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க 04.02.2008 அன்று பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்த புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளியில் குறிப்பிட்டுள்ள சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 16152/07 எம்.டி.2 | வார்டு எண் 6- சிங்காநல்லூர் சந்தைப்பேட்டை வளாகத்தில் தினசரி சந்தை, பொதுக்கழிப்பிடம் மற்றும் அலுவலகம் கட்டுதல் | 22.00 | 29.1.08 | எம்.எஸ். இன்ஜினியர்ஸ் | 4.77% அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - இப்பணியின் மதிப்பீடு மாமன்ற அனுமதி வரம்பிற்குள் வருவதால் அனுமதிக்கலாம். ந.க.எண் 16152/07 /எம்.டி.2

**மா.ம.தீர்மான எண் : 291 நாள் : 27.03.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 11

பொருள் : குத்தகை - கோயம்புத்தூர் மாநகராட்சி - கிழக்கு மண்டலம்- சிங்காநல்லூர் பேருந்து நிலையம் பொருட்கள் பாதுகாப்பு அறை- மாநகராட்சி படகுத்துறை-ஆகிய குத்தகை இனங்களின் உரிம காலம் முடிவடைந்தது - பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளி அறிக்கை கோருதல் - தொடர்பாக.

----------

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட சிங்காநல்லூர் மாநகராட்சி படகுத்துறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். 16.12.04 முதல் 15.12.07 வரையிலான மூன்றாண்டு காலத்திற்கு திரு.ஹரி என்பவருக்கு மாமன்ற தீர்மான எண்.196 நாள் 29.11.04 -ன் படி ஒப்படைசெய்யப்பட்டது. மேலும் சிங்காநல்லூர் பேருந்துநிலையத்தில் உள்ள பொருட்கள் பாதுகாப்பு அறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 16.12.04 முதல் 15.12.07 வரையிலான மூன்றாண்டு காலத்திற்கு திரு.எ.சந்திரன் என்பவருக்கு மாமன்ற தீர்மான எண் 198 நாள் 29.11.04-ன் படி ஒப்படை செய்யப்பட்டது. மேற்படி உரிம இனங்களின் குத்தகை காலம் 15.12.07-உடன் நிறைவடைந்துவிட்டது.

சிங்காநல்லூா் மாநகராட்சி படகுத்துறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிம ஒப்பந்ததாரா் திரு.கே.ஹரி என்பவரால் கீழ்க்காண் ஒப்பந்த விதிகள் சரிவர கடைபிடிக்கப்படாமல் உள்ளதால் அதற்கான விளக்கத்தினை 24 மணிநேரத்தில் தெரிவிக்கக்கோரி இவ்வலுவலக 13.12.07-ம் தேதிய அறிவிப்பு வாயிலாக தெரிவிக்கப்பட்டது.

<u>நிபந்தனை எண்-10</u> படகுசவாரிக்கு இடையூறுகள் ஏற்படாவண்ணம் படகுத்துறையும் குளமும் சீராக பராமரிக்க வேண்டும். ஆனால் அவ்வாறு பராமரிக்கப்படாததால் படகுத்துறையில் ஆகாயத்தாமரைகள் சூழ்ந்து படகுகள் இயக்கப்படாமல் உள்ளது. மேலும் மாநகராட்சியால் சிறுதுளி இயக்கத்தின்மூலம் ஆகாயத்தாமரைகள் அப்புறப்படுத்தப்பட்டு வழங்கப்பட்டபோதும் தொடா்ந்து படகுத்துறை சீராக பராமரிக்கப்படவில்லை.

<u>நிபந்தனை எண்-12</u> படகுத்துறையின் உட்புறம் அலங்கார வண்ண விளக்குகளுடன் கூடிய இசை நீரூற்று ஒப்பந்ததாரா் சொந்தசெலவில் அமைத்தல்வேண்டும்.

<u>நிபந்தனை எண்-13</u> படகுத்துறையின் உட்புறம் உள்ள உயரமான திட்டுக்களில் பாா்வையாளா்கள் அமரும் வண்ணம் இருக்கைகள் ஒப்பந்ததாரா் செலவில் அமைத்தல் வேண்டும்.

குத்தகை ஒப்பந்தகாலம் நிறைவடைந்த பின்னும் மேற்காண் நிபந்தனைகளை நிறைவேற்ற ஒப்பந்ததாரருக்கு போதிய காலஅவகாசம் அளிக்கப்பட்டும் நிறைவேற்றப்படவில்லை. மேலும் நாளது தேதி வரை இது தொடா்பாக எவ்வித விளக்கமும் குத்தகைதாரரால் அளிக்கப்படவில்லை. எனவே இவ்வலுவலக 08.01.08 தேதிய உத்திரவு மூலம் உரிமம் ரத்து செய்யப்பட்டுள்ளது. மேலும் இவா் செலுத்திய வைப்புத்தொகையினை பறிமுதல் செய்து மாநகராட்சி நிதியில் வரவாக்கவும், உரிமகாலம் முடிவடைந்த குத்தகை இனங்களான சிங்காநல்லூா் படகுத்துறையில் கட்டணம் வசூல் செய்தல் மற்றும் சிங்காநல்லூா் பேருந்து நிலையத்தில் பொருட்கள் பாதுகாப்பு அறையில் கட்டணம் வசூல் செய்தல் ஆகிய குத்தகை இனங்களை (ஒப்படை செய்யும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு) பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரவும், பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒப்படை செய்யப்படும் வரை மேற்காண் குத்தகை இனங்களை துறை மூலம் வசூல் செய்யப்பட்டு வருவதற்கும், ஏல விளம்பர அறிவிப்புகளை தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்யவும் அதற்கான செலவினங்களை ஏற்றுக்கொள்ளவும் பொது ஏலம் நிபந்தனைகளை அங்கீகரிக்கவும், வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்பட்டதில் வரி விதிப்பு மற்றும் நிதிக் குழு தனது தீா்மான எண். 26 நாள் 23.01.08ன் மூலம் அனுமதி வழங்கி உள்ளது.

இந்நிலையில் தற்போது படகுத்துறை குளத்தில் முற்றிலும் ஆகாய தாமரைகள் சூழ்ந்து படகுகள் இயக்க முடியாத நிலையில் உள்ளது. இதனால் படகுத்துறையில் துறை மூலம் வசூல் செய்ய சாத்திய கூறுகள் இல்லை. எனவே, படகு துறையினை பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒப்படை செய்யப்படும் வரை மாற்று பணி அடிப்படையில் பாதுகாவலா் மட்டும் நியமனம் செய்து பாதுகாத்து வரவும், காலதாமதத்தினை தவிா்க்கும் பொருட்டு அவசர அவசியத்தை கருதி வணக்கத்திற்குரிய மேயா் அவா்களின் முன் அனுமதி பெற்று மேற்படி இனங்களை வருடாந்திர ஏல இனங்களுடன் சோ்த்து பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிக்கை கோரப்பட்டு வருவதற்கும், மேலும் வரிவதிப்பு நிதிக்குழு தீா்மானத்தின் மீதும் மாமன்ற அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 11944 / 07 / A7

<u>**மா.ம.தீா்மான எண் : 292 நாள் : 27.03.2008**</u>

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மானம் எண். 26 நாள் 23.01.08-ன் ஒப்புதலை ஏற்று அனுமதிக்கலாம் எனவும், அலுவலகக் குறிப்பினை அனுமதிக்கவும் தீா்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆா். வெங்கடாசலம்
மேயா்
கோயம்புத்தூா் மாநகராட்சி

---

பொருள் எண் 12

கோவை மாநாகராட்சி பகுதிகளில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழு பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணிகளை ஏற்க 22-01-08 மற்றும் 04-02-08 அன்று பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி நாள் | ஒப்பந்ததாரா் பெயர் | ஒப்பந்தப் புள்ளியில் குறிப்பிட்டுள் ள சதவீதம். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 15080/07/ எம்டி4 | வார்டு எண் 49ல் உள்ள பி.வி.பி. நடுநிலைப்பள்ளியில் தற்போதுள்ள ஒட்டுகூரையை ஆர். சி. சி கூரையாக மாற்றுதல். கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல் மற்றும் மாணவா்களுக்கு கழிவறை கட்டுதல் | 25.00 | 29-01-2008 முதல் அழைப்பு | கே. கோவிந்தராஜ் | 0.29 குறைவு |
| 2 | 15330/07/ எம்டி4 | வார்டு எண் 51ல் உள்ள வாழைக்காய் மண்டி வளாகத்தில் சமுககூடம் கட்டுதல் | 14.80 | 29-01-2008 இரண்டாம் அழைப்பு | தி/ள் கே.சி.பி. இன்ஜினியா்ஸ் & பேப்ரிகேட்டா்ஸ் | 4.72 அதிகம் |
| 3 | 7708/07/ எம்டி4 | வார்டு எண் 42ல் உள்ள சுண்டக்காமுத்துார் ரோடு, சேதுமா வாய்க்கால் ரோடு சந்திப்பில் பெண்களுக்கு கழிவறை கட்டுதல் | 4.90 | 18-12-2007 முதல் அழைப்பு | எஸ். பி. எஸ். அசோசியேட்ஸ் | 4.92 அதிகம் |
| 4 | 12308/07/ எம்டி4 | வார்டு எண் 37ல் உள்ள சிட்டி மாநகராட்சி மேல்நிலைப்பள்ளியில் கிழக்கு மறறும் மேற்கு பகுதி ஒட்டுக்கூரை கட்டிடத்தை ஆர்.சி.சி. கூரையாக மாற்றியமைத்தல் | 14.80 | 22-01-2008 முதல் அழைப்பு | திரு. என். குருவாயூரப்பன் | 4.94 அதிகம் |
| 5 | 1190/07/ எம்டி4 | வார்டு எண் 37ல் உள்ள ஒப்பணகார வீதி மாநாகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் அலுவலக அறை மற்றும் கழிவறை கட்டுதல் | 10.00 | 18-12-2007 நான்காம் அழைப்பு | திருமதி. கே. பங்கஜம் | 4.97 அதிகம் |
| 6 | 13977/07/ எம்டி4 | வார்டு எண் 44ல் டிகே மார்கெட்டில் உள்ள பொதுகழிப்பிடத்தில் பராமரிப்பு பணி செய்தல் | 3.50 | 4-01-08 முதல் அழைப்பு | திரு. பி. இளங்கோ | 4.13 அதிகம் |
| 7 | 13640/07/ எம்டி4 | வார்டு எண் 12ல் சாரமேடு, காந்திநகா், வள்ளல்நகா், பாத்திமாநகா், ஞானியா்நகரில் கிணற்றுமண் சாலை அமைத்தல் | 5.00 | 4-01-08 | திரு. ஆா் தனபால் | 3.28 அதிகம் |
| 8 | 13648/07/ எம்டி4 | வார்டு எண் 12ல் ரமலான் நகா், ராஜீவ் நகா், இலாஹி நகா் மற்றும் சலாமத் நகரில் கிணற்றுமண் சாலை அமைத்தல் | 5.00 | 4-01-08 | திரு. ஆா் தனபால் | 3.28 அதிகம் |
| 9 | 13881/07/ எம்டி4 | வார்டு எண் 12ல் இந்திரா நகா், ஆா்கேவி நகா், பாடசாலைவீதி, பூங்கா நகா், மற்றும் நேதாஜீ நகா் தொடா்ச்சி -2 பகுதிகளில் கிணற்றுமண் சாலை அமைத்தல் | 5.00 | 4-01-08 | திரு. ஆா் தனபால் | 3.26 அதிகம் |
| 10 | 13651/07/ எம்டி4 | வார்டு எண் 12ல் ஜி.எம் நகா் குறுக்குசாலைகளில் கிணற்றுமண் சாலை அமைத்தல் | 5.00 | 4-01-08 | திருமதி. ஏ. மீனாட்சி | 4.21 அதிகம் |
| 11 | 13652/07/ எம்டி4 | வார்டு எண் 13ல் கோட்டை புதுார், காந்திநகா் பகுதிகளில் கிணற்றுமண் சாலை அமைத்தல் | 4.50 | 4-01-08 | திருமதி. ஏ. மீனாட்சி | 4.20அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- வரிசை எண் 1ல் உள்ள பணியின் மதிப்பீடு மாமன்ற அனுமதி வரம்பிற்குள் வருவதாலும் வரிசை எண் 2 முதல் 11 வரையிலான பணிகள் குறிப்பிட்ட கால கெடுவுக்குள் முடிக்க வேண்டி இருப்பதாலும் , மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதை விட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டை காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் , அனுமதிக்கலாம்.

ந.க.எண். 15080/07/எம்.டி4.

**மா.ம.தீர்மான எண் : 293 நாள் : 27.03.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 13

மனுதாரர் திரு. ரமேஷ்ருத்ரப்பன் எல்டெக்ஸ் இன்ஜினியரிங் காபப்ரேஷன் பிரைவேட் லிமிட்டெட் நிறுவனத்தாரின் சொந்தமான இடம் மாநகராட்சி வடக்கு மண்டலம், கணபதி கிராமம், க.ச. எண்- 152/1A2/ , 166/3A1 பகுதியில் அமைந்துள்ள 2.86 1/2 ஏக்கர் நிலத்தினை தொழிற்சாலை நில உபயோகத்திலிருந்து குடியிருப்பு நில உபயோக மாற்றம் செய்து தருமாறு கோரியுள்ளார்.

உத்தேச நில உபயோக மாற்றம் செய்யும் மனையிடத்தின் பரப்பு 2.86 1/2 ஏக்கர், மனுதாரரின் மனையிடம் கணபதி விரிவு அபிவிருத்தித்திட்டம் எண்- 8லும், முழுமைத் திட்டத்தின்படி தொழிற்சாலைப் பகுதியில் அமைந்துள்ளது. மனையிடத்திற்கு வட்டாச்சியரின் சான்று பெறப்பட்டுள்ளது. சொத்துவரி செலுத்தப்பட்டுள்ளது. மனையிடத்தின் முன்புறம் 40'0" அகலமுள்ள தார்சாலை மாநகராட்சியின் பராமரிப்பில் உள்ளது. மனுதாரரின் மனையிடத்தை தொழிற்சாலைப் பகுதியில் இருந்து குடியிருப்பு பகுதியாக மாற்றம் செய்வது குறித்து தீர்மானிக்க நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக் குழுவின் முடிவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டது.

நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழு தனது தீர்மான எண். 44 நாள். 12.2.2008 -ல் “ பொருளில் குறிப்பிட்டுள்ள இடத்தினை தொழிற்சாலை நில உபயோகத்தில் உள்ளதினை குடியிருப்பு நில உபயோகமாக மாற்ற கோரும் மனுதாரரின் மனுவை மாமன்றத்திற்கு பரிந்துரை செய்ய தீர்மானிக்கப்பட்டது” கணபதி கிராமம், க.ச. எண் 152/1A2/ , 166/3A1 பகுதியில் அமைந்துள்ள 2.86 1/2 ஏக்கர் நிலத்தினை தொழிற்சாலை நில உபயோகத்திலிருந்து குடியிருப்பு நில உபயோக மாற்றம் செய்ய மாமன்ற ஒப்புதலுக்காக பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- ஒப்புதல் வழங்கலாம். ந.க.எண் 10046/07/ எச்2(வ).

**மா.ம.தீர்மான எண் : 294 நாள் : 27.03.2008**

நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழுவின் தீர்மானம் எண். 44 நாள் 12.02.08-ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 14

கோயம்புத்தூர் மாநகராட்சி, தெற்கு மண்டலம், வார்டு எண். 42 -ல் உள்ள சாவித்திரி நகர், பாலாஜி அவென்யூ பகுதியில், அசோக் நகர் மற்றும் அபிராமி நகர் பகுதியை இணைக்கும் 40 அடி அகல திட்ட சாலையை உடன் செயல்படுத்துமாறு 42 -வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, சாலை இணைப்பிற்கு தேவையான நிலப்பரப்பைக் காட்டும் வரைபடம் மற்றும் உரிய அறிக்கை, நில அளவையர் தெற்கு மண்டலம் அவர்களால் நகரளவை ஆவணங்கள் பரிசீலனை செய்தும் அளவைப்பணி செய்தும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி திட்ட சாலை, அசோக் நகர் மற்றும் அபிராமிநகர் பகுதியை இணைப்பதால் அப்பகுதியில் உள்ள பல குடியிருப்புகளுக்கு நேரான அணுகு சாலை அமையும். பல காலமாக பாலாஜி அவென்யூ பகுதியில் நமது மாநகராட்சிக்கு சொந்தமான பொது இடத்தில் (ரிசர்வ் சைட்) தேங்கிவரும் கழிவு நீரை இத்திட்டசாலையில் மழைநீர் வடிகால் அமைத்து வெளியேற்ற ஏதுவாகும். எனவே அப்பகுதியில் பொது சுகாதாரத்தை ஏற்படுத்த இயலும்.

எனவே மேற்காணும் சாலைகளை இணைக்க பின்வரும் நிலப்பரப்புகளை கையகப்படுத்த வேண்டியுள்ளது.

கோயம்புத்தூர் நகரம் சர்வே வார்டு எண். 3, பிளாக் எண். 9-ல் க.ச.எண். 534 பகுதியில் 34 சதுரமீட்டர் (365.85 சதுரடி), வார்டு எண். 3, பிளாக் எண். 9-ல் க.ச.எண். 548 பகுதியில் 690 சதுரமீட்டர் (742.44 சதுரடி), க.ச. எண். 2183 -ல் 40 சதுரமீட்டர் (430.40 சதுரடி) மற்றும் க.ச. எண். 2184 -ல் 70 சதுரமீட்டர் 834 சதுரமீட்டர் (8973.84 சதுரடி) இடத்தை இட உரிமையாளர்கள் தானமாக தர மறுப்பதால் கையகப்படுத்த வேண்டியுள்ளது. மேற்படி நிலங்கள் நகரளவைப் பதிவேடுகளில் பட்டா நிலங்களாக பதிவு செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது மேற்படி நிலங்கள் நிலையில் தரிசு நிலங்களாக உள்ளது.

பொது மக்களின் சுகாதாரம் மற்றும் போக்குவரத்து வசதி ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு சாவித்திரி நகர், பாலாஜி நகர் பகுதியில் உள்ள அசோக் நகர் மற்றும் அபிராமி நகர் பகுதியை இணைக்கும் 40 அடி அகல திட்டசாலை அமைக்க மேற்கூறிய 834 சதுரமீட்டர் (8975 சதுரடி) நிலப்பரப்பை நகரமைப்பு திட்ட விதிகளைப் பின்பற்றி கட்டாய நில ஆர்ஜிதம் செய்ய அனுமதி வேண்டி நகரமைப்புக்குழுவுக்கு பொருள் வைக்கப்பட்டது. உத்தேச திட்டசாலை இணைப்புக்காக கையகப்படுத்த வேண்டிய பட்டா நிலப்பரப்பினைக் காட்டும் வரைபடம் மற்றும் அதற்கான நகரளவை பதிவேட்டின் நகல் ஆகியன நகரமைப்புகுழுவின் பார்வை மற்றும் பரிசீலனைக்காக சமர்ப்பிக்கப்பட்டதில் குழு தனது தீர்மான எண் 48 நாள். 26.2.08-ல் “ மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது” என்று பொருளை மாமன்றத்திற்கு பரிந்துரை செய்ய தீர்மானம் நிறைவேற்றி உள்ளதினை மாநகர மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- பொருளில் குறிப்பிட்ட இடத்தை நில ஆர்ஜிதம் செய்து சாலை அமைக்கவும் அதற்காகும் செலவினங்களுக்கும் அனுமதி வழங்க தீர்மானிக்கலாம்.

ந.க.எண். **12119 / 07/ MH5** (தெ)

**<u>மா.ம.தீர்மான எண் : 295 நாள் : 27.03.2008</u>**

நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழுவின் தீர்மானம் எண். 48 நாள் 26.2.08-ஐ ஏற்று பொருளில் குறிப்பிட்டுள்ள இடத்தை நில ஆர்ஜிதம் செய்து சாலை அமைக்கஅலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 15

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – சொத்துவரி –பொது சொத்துவரி சீராய்வு- உத்திரவினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்- சம்பந்தமாக

பார்வை - 1. அரசாணை (எம்.எஸ்.)எண். 150, நகராட்சிகளின் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (தேர்தல்) நாள் 12.11.2007.

2. நகராட்சிகளின் நிர்வாக ஆணையரின் வழிகாட்டு அறிக்கை மற்றும் படிவங்கள் சுற்றறிக்கை ந.க.எண் 63017 /2007 /ஆர் 1 நாள் 9.1.2008

----------

பார்வையில் கண்டுள்ள அரசாணை மற்றும் நகராட்சிகளின் நிர்வாக ஆணையரின், வழிகாட்டு அறிக்கை முறைகள் மற்றும் மாதிரி படிவங்கள், வரி செலுத்துவோர் அளிக்க வேண்டிய சொத்துவரி சுய மதிப்பீட்டு மாதிரி படிவம், வரிவிதிப்புக் கணக்கீட்டுப் படிவம் மற்றும் செயல்படுத்தப்பட வேண்டிய நாட்கள் குறித்த சுற்றறிக்கைகள் அனைத்தும் நிதி மற்றும் வரிவிதிப்புக்குழு தீர்மான எண் 28 நாள் 3.3.2008-ல் தீர்மானித்து அதனை மாமன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பித்து பதிவு செய்யலாம் என பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - பதிவு செய்யலாம். ந.க.எண் 2627 /2005/ எம்சி.1

**மா.ம.தீர்மான எண் : 296 நாள் : 27.03.2008**

அரசு ஆணை மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையரின் வழிகாட்டு நெறிமுறைகள் பதிவு செய்ய தீர்மானிக்கப்பட்டது. பொது சொத்துவரி சீராய்வு குறித்து தனியாக மன்றப்பொருள் வைத்து, விவாதித்து முடிவு செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 16**

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண் 27-க்குட்பட்ட அவிநாசி சாலை மாநகராட்சி வணிக வளாகத்தில் மேற்கு பகுதியில் அமையவுள்ள பாஸ்போர்ட் அலுவலகத்தில் உள்கட்டமைப்பு பணிக்கு ரூ. 24,80,000 க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது.

எனவே அவசியம் கருதி தயாரிக்கப்பட்ட இம்மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 1873/ 07 / எம்.டி.4 (தெ)

**மா.ம.தீர்மான எண் : 297 நாள் : 27.03.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 17**

பொருள்- கோவை மாநகராட்சி – வடக்கு மண்டலம் - வார்டு -33 – சிவானந்தா - காலனி டேங்க் சாலை அருள்மிகு கற்பக விநாயகர் திருக்கோவிலுக்கு சொத்துவரி விதிப்பிலிருந்து விலக்கு அளிப்பது – தொடர்பாக.

---------------

கோவை மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண்-33, சிவானந்தாகாலனி, டேங்க் சாலை அருள் மிகு கற்பக விநாயகர் திருக்கோவிலுக்கு சொத்துவரி விதிப்பிலிருந்து விலக்கு அளித்து குடிநீர் இணைப்பு வழங்குமாறு கோவிலின் நிர்வாகத்தார் விண்ணப்பம் செய்துள்ளனர்.

மேற்கண்ட கோவிலில் வருவாய் தரத்தக்க வகையில் எந்த வர்த்தக நிறுவனங்களும் இல்லை என சம்மந்தப்பட்ட வரிவசூலர் அறிக்கை சமர்ப்பித்துள்ளார். மேலும், இத்திருக்கோவிலுக்கு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

கோவிலுக்கு வரும் பொது மக்களின் நலன் கருதி குடிநீர் இணைப்பு வழங்குவதற்காக சொத்துவரி விதிப்பிலிருந்து கோவை மாநகராட்சி சட்டம் 1981 விதி 123-A-ன் கீழ் விலக்கு அளிக்க வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவுக்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண் 22 நாள்-23.01.08ன்படி ஒப்புதல் அளித்துள்ளது. அவசர அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இது சம்பந்தமாக மாமன்றத்தின் ஒப்புதல் பெற மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண் 14646/2007/A4(வ)

**மா.ம.தீர்மான எண் : 298 நாள் : 27.03.2008**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண். 22 நாள் 23.01.08-ன் ஒப்புதலை ஏற்று அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 18**

கோயம்புத்தூர் கிட்னி கேர் மற்றும் ரிசர்ச் லிமிடெட், கோயம்புத்தூர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலம், புலியகுளம் காலையில் உள்ள ந.அ. எண். 4270 , பகுதி (புதியது) ந.அ.எண். 10 / 1075 / 1பி2 பாகம் (பழையது) -ல் 32312 சதுரடி அல்லது 74.18 சென்ட் உள்ள இடத்தினை தொழிற்சாலை நிலஉபயோகப்பகுதியில் இருந்து பொது உபயோகப்பகுதியாக மாற்றம் செய்யவும், பலமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிக்க கோரியும் 4.12.2007 -ல் விண்ணப்பம் செய்துள்ளார்.

மேற்படி மனையிடம் கோயம்புத்தூர் மாநகராட்சி தேர்தல் வார்டு எண். 21 -ல் அமைந்துள்ளது புலியகுளம் சாலை 'எஸ்' வளைவில் 75 அடி அகல ரோடு இடத்திற்கு அணுகு சாலையாக உள்ளது. மேற்படி இடம் கோயம்புததூர் விரிவு அபிவிருத்தி திட்டம் எண். 14 -லும் முழுமைத் திட்டத்தின்படி தொழிற்சாலைப்பகுதியிலும் அமைந்துள்ளது. மனுதாரர் மனையிடத்தில் ஏற்கனவே உள்ள கட்டிட பகுதிகளை அப்புறப்படுத்திவிட்டு பல அடுக்குமாடி மருத்துவமனை கட்டிடம் கட்ட உத்தேசித்துள்ளார்.

உத்தேச கட்டிடத்தின் உயரம் 21.83 மீட்டர் ஆகும். உத்தேச கட்டிட வேலை ஆரம்பிக்கப்படவில்லை. மனையிடத்திற்குண்டான சொத்து வரி 2007 - 2008 II-ம் அரையாண்டுவரை செலுத்தப்பட்டுள்ளது.

மேற்படி மனுதாரரின் கோரிக்கையின் மீது முடிவு செய்ய நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழுவின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்பட்டதில், குழு தனது தீர்மான எண். 45 நாள் 26.2.2008 -ல் " தொழிற்சாலை உபயோகத்திலிருந்து, பொது உபயோகமாக மாற்றக் கோரும் இப்பொருள் மாமன்றத்தின் முடிவுக்கு பரிந்துரைக்கப்படுகிறது" என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

எனவே கோயம்புத்தூர் மாநகராட்சி நகரளவு எண். 4270 பாகம் (புதியது) நகரளவு எண். 10 / 1075 / 1பி2 (பழையது) -ல் உள்ள 74.18 சென்ட் அல்லது 32312 சதுரடி இடத்தை தொழிற்சாலை நில உபயோக பகுதியில் இருந்து பொது உபயோக நிலப்பகுதியாக மாற்றம் செய்யவும், அப்பகுதியினை பல அடுக்கு மாடிக்கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்யவும் கோரும் மனுதாரரின் விண்ணப்பத்தினை நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்ப மாமன்றத்தின் முடிவுக்கு பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- நில உபயோக மாற்றம் செய்யவும், பலமாடி கட்டிடம் கட்டும் பகுதியாகஅறிவிப்பு செய்யவும் மாமன்றம் பரிந்துறை செய்யலாம்.

ந.க.எண். 16200 / 2007 / H2(கி)

**<u>மா.ம.தீர்மான எண் : 299 நாள் : 27.03.2008</u>**

நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழுவின் தீர்மானம் எண். 45 நாள் 26.2.08-ஐ ஏற்று பொருளில் குறிப்பிட்டுள்ள நிலத்தை தொழிற்சாலை உபயோகத்திலிருந்து பொது உபயோகமாக மாற்றம் செய்ய தீர்மானிக்கப்பட்டது. மேலும் இவ்விடத்தை பலமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்ய பரிந்துரை செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 19**

**பொருள்-** கோவை மாநகராட்சி – தெருவிளக்குகள் பராமரிப்பு - மின் கட்டணம் மின்சார சேமிப்பு (Power savings) மற்றும் தெருவிளக்குகள் பராமரிப்பு மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப்புள்ளிகள் கோருதல் சம்பந்தமாக .

-----------

கோவை மாநகராட்சியின் பகுதிகளில் அடிப்படை தேவைகளில் ஒன்றான தெருவிளக்கு வசதியானது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. கோவை மாநகரில் தெருவிளக்கு பராமரிப்பு பணி இரண்டு தனியார் நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தி/ள் சன்மேக் எண்டர்பிரைசஸ், கோவை நிறுவனம் தெற்கு மற்றும் மேற்கு மண்டலங்களிலும், தி/ள் சபரி எலக்ட்ரிகல்ஸ், கோவை நிறுவனம் வடக்கு மற்றும் கிழக்கு மண்டலங்களிலும் தெரு விளக்குகள் பராமரிப்பினை கடந்த மூன்று வருடங்களாக மேற்கொண்டு வருகின்றன.

| தெருவிளக்குகள் விபரம் | | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. 40 வாட்ஸ் குழல் விளக்குகள் | - | 3257 |
| 2. 70 வாட்ஸ் சோடியம் ஆவிவிளக்குகள் | - | 14299 |
| 3. 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் | - | 12219 |
| 4. 400 வாட்ஸ் உயர்மட்ட கோபுர விளக்குகள் | - | 208 |
| 5. புதிதாகஅங்கீகரிக்கப்பட்ட மனைபிரிவுகளில் போடப்பட்டுள்ள 70 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் | - | 4242 |
| மொத்தம் | | 34225 |

மேலும் நடப்பாண்டில் 5,000 தெருவிளக்குகள் அமைக்கப்படவுள்ளன.மேற்கண்ட தெருவிளக்குகளை பராமரிக்கும் இந்நிறுனங்களின் பராமரிப்பு பணிகளின் ஒப்பந்தங்கள் வருகின்ற 30.6.2008 ம் தேதியன்று கிழக்கு மற்றும் வடக்கு மண்டலங்களுக்கும் 1.7.2008 –ம் தேதியன்று மேற்கு மற்றும் தெற்கு மண்டல்ங்களுக்கும் முடிவு பெறுகின்றன.

மேலும் தற்பொழுது தெருவிளக்குகளுக்கு மின்கட்டனமாக ஆண்டொன்றுக்கு சராசரியாக ரூ.6.00 கோடியை மாநகராட்சி தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்தப்பட்டு வருகிறது.

தற்பொழுது மாநில மற்றும் மத்திய அரசுகளால் மின்சார சேமிப்பு மற்றும் மின்சார தணிக்கையினை பயன்படுத்தும்படி அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் மாநகராட்சிக்கு மின் கட்டண் சேமிப்பு ஏற்படுவதால் மாநகராட்சிக்கு சேமிப்பும், மின்சார உற்பத்தி செய்வதால் வெளயேறும் வெப்ப சக்தி குறைவால் சுற்றுப்புற பாதுகாப்பும் ஏற்படுகிறது.

பல நிறுவனங்கள் தெருவிளக்கு மின்சக்தி சேமிப்பு பற்றி செய்முறை ( DEMO) மூலம் மின்சார சேமிப்பினை நிருபித்துள்ளனா் . எனவே கோவை மாநகராட்சி பகுதிகளில் உள்ள தெருவிளக்குகளைப் பராமரிக்கவும் மற்றும் மின்சார சேமிப்பில் பங்கும் தனியாா் நிறுவனங்களுக்கு அளிக்கவும் இப்பணியினை துவங்கிய நாள் முதல் 5 வருடங்களுக்கு மேற்கொள்ளவும், அதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் ஒப்புதலுக்காக சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண். 3547/08/MD4

<u>மா.ம.தீா்மான எண் : 300 நாள் : 27.03.2008</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆா். வெங்கடாசலம்
மேயா்
கோயம்புத்தூா் மாநகராட்சி

---

## பொருள் எண் 20

கோவை மாநகராட்சி கல்வி அலுவலா் அவா்களின் 6.11.2007 –ம் தேதிய குறிப்பில் 19.2.2007–ம், தேதிய கல்விக்குழு தலைவா் அவா்கள் கடிதத்தில் , மாநகராட்சி பள்ளிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீா் வழங்கும் சாதனங்கள் பொருத்தி பள்ளி குழந்தைகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீா் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுரை வழங்கியுள்ளாா்கள் என்று தெரிவித்துள்ளாா். அதன்படி கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலத்தில் உள்ள ஆரம்பப்பள்ளிகள், நடுநிலைப்பள்ளிகள், உயா்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீா் வழங்கும் சாதனங்கள் பொருத்துதல் பணிக்கான மதிப்பீடு ரூ. 21,00,000,- க்கு தயாாிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி பெறுவதற்கு கல்விக்குழு தனது தீா்மான எண் 6 நாள் 25.1.2008-ல் அனுமதி அளித்து தீா்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

எனவே இப்பணிக்கான மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி கோரி மாமன்றத்திற்கு பொருள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- அனுமதிக்கலாம் ந.க. எண். 20304/ 07/ எம்.டி.2

**மா.ம.தீர்மான எண் : 301 நாள் : 27.03.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 21

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டல வார்டு எண் 42 க.எண் 92 சாமி அய்யர் புது வீதி குடியிருப்புகளுக்கு புதிய குடிநீர் இணைப்பு கேட்டு திரு பி. பொன்னுசாமி (எ) பொன்னு என்பவர் விண்ணப்பித்ததின் பேரில் பட்டியல் எண் 187/03 ஐ அனுமதி வழங்கப்பட்டது. புதிய குடிநீர் இணைப்பு கட்டணம் ரூ. 22445 /- நாள் 1.1.2004-ல் செலுத்திய பிறகு 01.01.04 –ல் வேலை உத்திரவு வழங்கப்பட்டது.

மனுதாரர் அவர்களின் 29.03.2004-ம் தேதிய விண்ணப்பத்தில் வேலை உத்திரவின்படி பணி துவங்கியபோது அருகாமையில் உள்ளவர்கள் ஆட்சேபணை தெரிவித்ததால் இளம் பொறியாளர் அவர்கள் 03.07.2004-ம் தேதி நேராய்வு செய்து மனுதாரரின் புதிய இணைப்பு பெறும் பிரதான குழாய் இராமகிருஷ்ணாபுரம் பகுதி மேற்கு மண்டலத்திற்கு உட்பட்டதாகும். இப்பகுதியிலிருந்து மனுதாரருக்கு குடிநீர் இணைப்பு வழங்க ஆட்சேபணை உள்ளதாலும் உதவி ஆணையர் இடம் நேராய்வு செய்து 14.07.2004-ல் பட்டியல் ரத்து செய்து மனுதாரருக்கு அசல் இரசீதுகள் ஒப்படைத்து தொகை திரும்ப பெற்றுக் கொள்ள 30.11.2005-ல் உரிய அசல் இரசீதுகள் ஒப்படைத்து தொகை திரும்ப வழங்குமாறு கேட்டுள்ளார்.

தொகை திரும்ப வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோது 09.03.06-ல் தணிக்கை பிரிவு குறிப்பு பெற உத்திரவிட்டதின் பேரில் 15.03.2006-ல் துணை இயக்குநர், உள்ளாட்சி தணிக்கை துறையிடம் கருத்துரை கேட்கப்பட்டதில் 17.04.2006-ம் தேதிய தணிக்கை துறை கடிதத்தில் சில விபரங்கள் கேட்கப்பட்டதற்கு 31.10.2006-ல் விளக்கம் அளிக்கப்பட்டது. மீண்டும் 26.10.2002 இவ்வலுவலக கடிதம் தெளிவான கருத்துரை கேட்கப்பட்டதில் துணை இயக்குநர் (பொ) மாநகராட்சி தணிக்கை அவர்கள் 921 /07/ அ1 நாள் 19.11.2007-ல் புதிய குடிநீர் இணைப்பிற்கு செலுத்திய காப்புத் தொகையினை தவிர இதர இனங்கள் அனைத்தும் வருவாய் வரவினங்கள் என்பதால் மாமன்றத்தின் சிறப்பு அனுமதி பெற்ற பின்னரே வழங்கலாம் என கருத்து தெரிவித்துள்ளார்.

எனவே மேற்படி மனுதாரர் செலுத்திய ரூ. 745/-ஐ தொகை ரூ. 22445/-ல் ஆய்வு தொகை ரூ. 745/- கழித்து ரூ. 21700/- (ரூபாய் இருபத்தி ஓராயிரத்து ஏழு நூறு மட்டும்) வழங்க மாமன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க. எண். 10716/(கு.வி1) சி2 (தெ)இ /2005

**மா.ம.தீர்மான எண் : 302 நாள் : 27.03.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 22

கோவை மாநகராட்சி, தெற்கு மண்டலம் வார்டு எண் 27 –க்குட்பட்ட அவிநாசி சாலை மாநகராட்சி வணிக வளாகத்தில் வடக்குப் பகுதியில் அமைய உள்ள பாஸ்போர்ட் அலுவலகத்தில் உள்கட்டமைப்பு பணிக்கு ரூ.24,70,000/- மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது.

எனவே அவசியம் கருதி தயாரிக்கப்பட்ட இம்மதீப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 18732 /07/எம்.டி.4

மா.ம.தீர்மான எண் : 303 நாள் : 27.03.2008

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 23

கோவை மாநகராட்சி, தெற்கு மண்டலம் வார்டு எண் 45 –க்குட்பட்ட ரங்கேகவுண்டர் வீதியில் மாநகராட்சிக்கு சொந்தமான காலியிடத்தில் வணிக வளாகம் கட்டுதல் பணிக்கு மதிப்பீடு ரூ. 20,00,000/- -க்கு தயாரிக்கப்பட்டு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேற்படி பகுதியில் வணிக வளாகம் அமைக்க வேண்டி அப்பகுதி பொதுமக்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர் கேட்டுக் கொண்டதனாலும், பொதுமக்களின் பயன்பாட்டிற்கும், மாநகராட்சிக்கு வருவாய் ஏற்படும்விதத்திலும் இப்பகுதியில் வணிக வளாகம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே தயாரிக்கப்பட்ட இம்மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க. எண். 17362 / 07/ எம்.டி.4

மா.ம.தீர்மான எண் : 304 நாள் : 27.03.2008

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 24

கோவை மாநகராட்சி, தெற்கு மண்டலம் வார்டு எண் 27 –க்குட்பட்ட வ.உ.சி. பூங்காவில் உள்ள நீரூற்றுகளில் நடைபாதை பாலம் கட்டுதல் மற்றும் நீரூற்றுக்கு அழகு படுத்தும் பணிகள் செய்தல் பணிக்கு மதிப்பீடு ரூ. 24,75,000/- க்கு தயாரிக்கப்பட்டு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது.

எனவே மதீப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 15083 /07/எம்.டி.4

மா.ம.தீர்மான எண் : 305 நாள் : 27.03.2008

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 25

கோவை மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் 53 ல் உள்ள செல்வபுரம் வடக்கு ஹவுசிங் யுனிட்டில் சமுதாயக் கூடத்தின் முதல் தளம் கட்டும் பணிக்கு சட்டமன்ற உறுப்பினர் நிதி ஒதுக்கீட்டிலிருந்து மதிப்பீடு ரூ.13,80,000 த்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு இப்பணிக்கு 22.01.2008 நாள் அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

| வ. எண் | பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|
| 1 | மெசர்ஸ். பூஜா இஞ்சினியரிங் | 8.20 % அதிகம் |
| 2 | மெசர்ஸ்.எம்.எஸ். இஞ்சினியர்ஸ் | 4.86 % அதிகம் |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் திறனாய்வு குழுவினால் பரிசீலிக்கப்பட்டு மெசர்ஸ்.எம்.எஸ். இஞ்சினியர்ஸ் 4.86 % அதிகம் ஒப்பந்தப்புள்ளி ஏற்க 04.02.2008 அன்று பரிந்துரை செய்துள்ளது.

எனவே மதிப்பீட்டிற்கு 4.86% அதிகமாக பெறப்பட்டுள்ள மெசர்ஸ்.எம்.எஸ். இஞ்சினியர்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : இப்பணியின் மதிப்பீடு மாமன்ற அனுமதி வரம்பிற்குள் வருவதால் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 9214/07/எம்.டி.3

**மா.ம.தீர்மான எண் : 306 நாள் : 27.03.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 26

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண் 37 ல் உள்ள சி.எம்.சி காலனியில் சத்துணவு மையம் கட்டும் பணிக்கு சட்டமன்ற உறுப்பினர் நிதி ஒதுக்கீட்டிலிருந்து மதிப்பீடு ரூ.7,00,000 த்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு இப்பணிக்கு 22.01.2008 நாள் அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

| வ. எண் | பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு. என். குருவாயூரப்பன் | 4.87 % அதிகம் |
| 2 | திரு. பி. இளங்கோ | 7.51 % அதிகம் |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் திறனாய்வு குழுவினால் பரிசீலிக்கப்பட்டு திரு. என். குருவாயூரப்பன் 4.87% அதிகம் ஒப்பந்தப்புள்ளி ஏற்க 04.02.2008 அன்று பரிந்துரை செய்துள்ளது.

எனவே மதிப்பீட்டிற்கு 4.87% அதிகமாக பெறப்பட்டுள்ள திரு.என். குருவாயூரப்பன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :- இப்பணியின் மதிப்பீடு மாமன்ற அனுமதி வரம்பிற்குள் வருவதால் அனுமதிக்கலாம். ந.க.எண் 13438/07/எம்.டி.3

**மா.ம.தீர்மான எண் : 307 நாள் : 27.03.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 27

சிறப்பு பொருளாதார மண்டல விதிகளின் படி அம்மண்டலத்துள் அமையும் நிறுவனங்கள், மத்திய கலால் விதிகளின் படி, எந்த ஒரு வெளியமைப்புகளின் உரிமையும் இணையாக செயல்பட இயலாது.

தகவல் தொழில்நுட்ப பூங்காவை உள்ளடக்கிய சிறப்பு பொருளாதார மண்டலங்களினுள் வரும் சாலைகள் மற்றும் பொதுதிறவிடங்களை, சம்பந்தப்பட்ட உள்ளாட்சிக்கு தானமாக கொடுத்துவிட்டு பின்னர் அதனை அபிவிருத்தி செய்யும் நிறுவனம், அச்சாலைகள் மற்றும் பொதுதிறவிடங்களை, மேற்படி உள்ளாட்சியிடமிருந்து 30 வருட நீண்ட கால குத்தகைக்கு திரும்ப பெற்று அந்நிறுவனமே பராமரிக்க வேண்டும் என தலைமைச் செயலர் அவர்களால் 28.2.2008 அன்று உத்தரவிடப்பட்டுள்ளது. நிலப்பயன்பாடு மாற்றமின்றி சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் அதனை பராமரிப்பு செய்தல் வேண்டும்.

கோயம்புத்தூர் விளாங்குறிச்சி கிராமம் சர்வே எண்கள் 426/1,2, 427/1,2, 436, 437, 438, 439/1, 440, 458/2, 459/2, 461/3, 462/4, 463/4, 465/4, 466/4 -ல் உள்ள 61. 5 ஏக்கர் நிலப்பரப்பில் சிறப்பு பொருளாதார மண்டலத்துடன் கூடிய தகவல் தொழில்நுட்ப பூங்கா அரசு சார்பில், அரசின் எல்காட் நிறுவனம் மூலம் அமைக்கப்பட உள்ளது. இதற்கு கோவை உள்ளூர் திட்டக்குழுமம், ம.வ / ந.ஊ.இ.எண் 119 / 2007 என்கிற எண்ணில் நிபந்தனைகளுடன் கூடிய மனைப்பிரிவு ஒப்புதலை வழங்கியுள்ளது. மேற்படி மனைப்பிரிவின் பொதுதிறவிடம் மற்றும் சாலைகளை மாநகராட்சி வசம் எல்காட் நிறுவனத்திடமிருந்து தானமாக பெற்றுக் கொண்டு, பின்னர் அதனை தலைமைச் செயலரின் உத்தரவுப்படி 30 வருட குத்தகைக்கு எல்காட் நிறுவனத்திடமே 30 வருட பராமரிப்பிற்கு திரும்ப வழங்கலாம்.

அலுவலகக் குறிப்பு- அங்கீகரிக்கலாம் ந.க. எண். 5513 / 07 / H1(வ)

**மா.ம.தீர்மான எண் : 308 நாள் : 27.03.2008**

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 28

பொருள் - பணியமைப்பு - கோவை மாநகராட்சி – உதவி பொறியாளர் - பணியிடம் நிரப்புதல்-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக.

இம்மாநகராட்சியில் காலியாக உள்ள 9 (ஒன்பது) உதவி பொறியாளர் பணியிடங்களுக்கு நேரிடை நியமனம் செய்ய உதவி இயக்குநர், தொழில் மற்றும் செயல் வேலை வாய்ப்பு அலுவலகம், சென்னை அவர்களிடமிருந்து தனது கடிதம் எண். எக்ஸ் 2 /ஜி /0818 /07 நாள் 25.11.2007-ல் தகுதியான நபர்களின் பெயர்ப்பட்டியல் பெறப்பட்டது.

இவர்களை 08.01.2008 அன்று மாலை 3.00 மணியளவில் மாநகராட்சி பிரதான அலுவலகத்தில் நியமனக்குழு முன்னிலையில் அனைத்து அசல் சான்றிதழ்களுடன் ஆஜராக கோரியதன் பேரில், 4 நபர்கள் மட்டும் ஆஜராகியிருந்தனர். ஆஜரான 4 நபர்களும் உதவி பொறியாளர் பணிக்கு தகுதி பெற்றிருந்தனர். இவர்களை நியமனக்குழு தனது தீர்மானம் எண். 48 நாள் 08.01.2008-ல் தேர்வு செய்து, மாமன்ற தீர்மானம் எண். 257 நாள் 21.01.08-ன்படி மாமன்ற ஒப்புதல் பெறப்பட்டு பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

கடந்த 08.01.08 அன்று நியமனக் குழுவின் முன் ஆஜராகி பணியமர்த்தப்பட்ட 4 உதவிப் பொறியாளர்கள் தவிர மீதமுள்ள 5 நபர்களை 20.02.08 அன்று மாலை 3.00 மணிக்கு நியமனக்குழு முன்னிலையில் ஆஜராகக் கோரியதன் பேரில் கீழ்க்கண்ட ஒரே ஒரு நபர் மட்டும் ஆஜரானார்.

| வ. எண் | பெயர் /விலாசம் | இனவாரி சுழற்சி | பிறந்த தேதி | வயது | கல்வித்தகுதி | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1. | கே. ரமாதேவி<br>எண். 50, சிவசக்தி நகர்,<br>தண்ணீர்பந்தல் அருகில்,<br>ஹோப் காலேஜ்,<br>கோயம்புத்தூர்-641 014 | R.No. 9 General Turn Non Priority | 15.06.1973 | 34 | P.G. Engineering (Civil Engineering) | |

இவர் உதவிப் பொறியாளர் பணியிடத்திற்கு தகுதி பெற்றிருந்தார். இவரை நியமனக்குழு தனது தீர்மானம் எண். நாள் 20.2.08-ல் தேர்வு செய்துள்ளது.

கோவை மாநகராட்சி சட்டம் பிரிவு 106 (2) (b) - ன்படி வகுப்பு II- ன் கீழ் வரும் பதவிகளை அரசின் உறுதியாக்கத்திற்கு உட்பட்டு மாமன்றம் நிரப்பலாம் என்பதால் மாமன்றத்தின் அனுமதி பெற்று அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு உதவி பொறியாளர் பணியிடத்தில் 6500- 200- 11100 என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் பணி நியமனம் செய்ய மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண். 2375 /07 /எம்.சி 1

<u>மா.ம.தீர்மான எண் : 309 நாள் : 27.03.2008</u>

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 29

பொருள் - பணியமைப்பு - தமிழ்நாடு மாநகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் வழங்கல் பணியாளர் பணியமைப்பு விதி – உதவி பொறியாளர் / இளநிலை பொறியாளர் பதவியிலிருந்து உதவி நிர்வாக பொறியாளர் பதவிக்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டது - மாமன்ற அனுமதி வேண்டுதல்-தொடர்பாக.

--------

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி 2) துறை அரசாணை (2டி) எண். 105 நாள் 26.06.07-ன்படி கோயம்புத்தூர் மாநகராட்சிக்கென ஜவஹர்லால்நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் 4 உதவி செயற் பொறியாளர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

சென்னை உயர்நீதி மன்ற நீதிப்பேராணை (டபிள்யு.பி.எண். 18662 /2007 மற்றும் நீதிப் பேராணை பல்வகை மனு எண் 2, 3 மற்றும் 4/ 07 நாள் 29.01.2008) –ன்படி கீழ்க்கண்ட இளநிலை பொறியாளர் / உதவி பொறியாளர்களுக்கு தற்காலிக பதவி உயர்வு வழங்கலாம் என உயர்நீதிமன்றத்தால் உத்திரவிடப்பட்டுள்ளது.

1. திரு. எ. கருப்புசாமி, இளநிலை பொறியாளர்

2. திரு. எஸ்.கே. ஜெயராஜ், உதவி பொறியாளர்

ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 177768/ 06/ எம்.சி.1 நாள் 4.07.07-ன்படி இவர்கள் இருவரும் பணிமூப்பு பட்டியலில் அடுத்த பதவி உயர்விற்கு தகுதி உள்ளவர்களாக இருந்தனர்.

உயர்நீதிமன்ற உத்திரவிற்கிணங்க திரு எ. கருப்புசாமி, இளநிலை பொறியாளர் அவர்களையும், திரு எஸ்.கே. ஜெயராஜ், உதவி பொறியாளர் அவர்களையும் உதவி செயற் பொறியாளர்களாக தற்காலிகமாக பதவி உயர்வு செய்து பணியமர்த்த மாமன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் ஒப்புதலுடன் ஜவஹர்லால்நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்திற்காக அனுமதிக்கப்பட்ட பணியிடத்தில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

எனவே வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் ஒப்புதலுடன், உயர்நீதிமன்ற உத்திரவின்படி உதவி செயற் பொறியாளர்களாக தற்காலிகமாக பதவி உயர்வு வழங்கப்பட்டமைக்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. உதவி செயற் பொறியாளர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டதை உறுதியாக்கம் செய்யக்கோரி அரசிற்கு கடிதங்கள் அனுப்பவும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம்.   ந.க.எண் 177768 /06 / எம்சி 1

<u>மா.ம.தீர்மான எண் : 310 நாள் : 27.03.2008</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி